# சங்கமயுகம்

மலர்: 29 ஜூன்-ஜூலை 2015 இதழ்: 2

இருமாத இதழ்: ரூ. 8.00


# Raksha Bandhan

## ரக்ஷா பந்தன் வாழ்த்துக்கள்

பரமபிதா சர்வ சக்திவான்
சிவபரமாத்மாவின் துணையில்,
அவரது பாதுகாப்பு எனும்
குடை நிழலின் கீழிருந்து
சுய முன்னேற்றத்திற்காகவும்,
உலக நன்மைக்காகவும், மனம் சொல்,
செயல், தூய்மையாயிருந்து,
சதா அவரை நினைவு செய்து
கொண்டே இருப்போம் என்று
உறுதி மொழி எடுத்துக் கொள்வோமாக!








சென்னை: மெரினா பீச்சில் நேபாள பேரிடரில் பாதிக்கப்பட்டோருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டு தியான நிகழ்ச்சி: மேடையில் பி.கு. ஜான்சிராணி, பி.கு. சித்திரா, பி.கு. பீனா, பி.கு. வனிதா (துபாய்) கலந்து கொண்ட சகோதர சகோதரிகள்



**சென்னை:** ஹேப்பிவில்லேஜில் ஏற்பாடு செய்யபட்டிருந்த வருடாந்திர யோக பட்டி நிகழ்ச்சியில் குத்துவிளக்கு ஏற்றுபவர்கள் மும்பையில் இருந்து வருகை தந்த பி.கு. நளினி தீதி, பி.கு. சக்கு, பி.கு. பீனா, பி.கு. கலாவதி




யோக பட்டி நிகழ்ச்சியில் சிறப்பு வகுப்பு நடத்துபவர்கள்: பி.கு. நளினி தீதி, பி.கு. சக்கு



**சென்னை:** பி.கு. நளினி தீதி மற்றும் பி.கு. சக்கு சகோதரி அவர்களுக்கு சிறப்பு மரியாதை செலுத்தப்பட்டது, உடன் மூத்த சகோதரிகள்



**சென்னை:** யோக பட்டியில் கலந்து கொண்டவர்களில் தாய்மார்கள் குழுவின் ஒரு பகுதி.



**சென்னை:** யோக பட்டி செய்விப்பதற்காக சென்னை சாந்திதாமம் வருகை தந்த நளினி தீதி மற்றும் சகோதரிகளை வரவேற்கின்றார் பி.கு. பீனா



ஹேப்பி வில்லேஜில் குமாரர்களுக்காக ஏற்பாடு செய்ய பட்டிருந்த யோக பட்டி நிகழ்ச்சியில் குத்துவிளக்கு ஏற்றுபவர்கள் பி.கு. இராம்நாத், மதுபன் மற்றும் மூத்த சகோதர சகோதரிகள்

தலையங்கம்



# ராக்கி ஓர் அபூர்வ அணிகலன்

## (விந்தையான ரக்ஷா பந்தன்)

பாரத கலாச்சாரம் பழமை வாய்ந்தது, மகோன்னதமானது. இதன் ஆணி வேர் தூய்மை, அன்பு, சகோதரத்துவம் எனும் உயரிய பண்புகளாகும். எனினும், இப்போது இவை நமது பண்டைய கலாச்சாரம் என்று பெருமைப்படுகின்ற அளவில் தான் உள்ளது. இதன் அவசியத்தை இப்போது உணர்ந்து கொண்ட நாம், வாழ்க்கையில் இது இன்றியமையாதது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். இதனை நினைவூட்டும் பண்டிகைதான் ரக்ஷாபந்தன். இது ஒரு மதம் சார்ந்த பண்டிகை அல்ல. ஒரு இடம் சார்ந்த அல்லது ஒரு நாடு சார்ந்த பண்டிகையும் அல்ல. இது ஒட்டு மொத்த மனிதன் என்ற இனம் சார்ந்த பண்டிகை. இப்பண்டிகை சமீப காலமாக மக்களிடையே ஒரு சாதாரண சடங்காக வடிவம் பெற்று விட்டதைப் பார்க்க முடிகிறது. உண்மையில் இதன் தாத்பரியம் தெய்வீகமானது. மேலும் இது ஒரு புனிதமான, வரவேற்கத்தக்கப் புதுமைப் புரட்சி என்றே சொல்ல முடியும்.

ஏனெனில் ரக்ஷாபந்தன் நாளன்று கையில் அணிவிக்கப்படுகின்ற ராக்கி எனும் புனித கங்கணம் நாம் இதுவரையிலும் நினைத்துக் கொண்டிருந்தது போல ஒரு சாதாரண சடங்கல்ல. ஏனெனில் எல்லோருக்கும் அவசியமா யிருக்கின்ற ஒரு உன்னத இலட்சியம் நிச்சயமாக நிறைவேறுவதற்கு தேவையான சாத்தியக் கூறுகள் அத்தனையும்

# சங்கமயுகம்


## பொருளடக்கம்

மலர்: 29 ஜுன் ஜுலை 2015-16 இதழ்: 2


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 01 |
| 2. | பகவான் வாக்கு | 04 |
| 3. | ஸ்ரீமத் பகவத் கீதை | 05 |
| 4. | தாதி பிரகாஷ்மணிஜியின் பிரேரணை | 09 |
| 5. | கடவுள் வந்துவிட்டார் | 10 |
| 6. | உன்னத பயணம் | 12 |
| 7. | பந்தனத்திலிருந்து விடுபடுவதற்கான... | 19 |
| 8. | தூய்மையான செல்வம் | 22 |
| 9. | கடவுளுக்கு நம் உதவி தேவையா? | 26 |
| 10. | சிந்தனைக்கு.... | 28 |
| 11. | பாவத்தின் விளைவு | 30 |
| 12. | சேவை செய்தி | 32 |


இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலிருந்து தொகுத்து வழங்கப்பட்டவையாகும். ஆசிரியர்

**“தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி”**



இதில் அடங்கி யிருக்கிறது என்பதே இதன் சிறப்பு. உதாரணமாக நமக்குத் தெரியும், மின்சக்தி இல்லாத ஒரு மெல்லிய உலோகக்கம்பியை, ஒரு சாதாரண ஒயர் எனப் புரிந்து கொள்கிறோம். ஆனால் இந்த சாதாரண ஒயர் மின்சக்தி செலுத்தும் சாதனமாகப் பயன்படுத்தப்படும்போது, இது மகத்தான சக்தியாக ஆற்றல் பெற்று விடுகிறது. அதாவது இதன் மூலம் பெரிய தொழிற்சாலைகளில் உள்ள இராட்சத இயந்திரங்களின் சக்கரங்களையும் எளிதாகவே இயங்கவைக்கும் சக்தியுடையதாகி விடுகிறது என்பதுதான். இது போலவே உண்மையான அன்பும், ஆன்மீக ஞானமும் இணைந்த உன்னத நோக்குடன் அணிவிக்கப் படுகின்ற ராக்கி எனும் அணிகலனின் சக்தியானது, மனித இதயங்களை மாற்றவல்ல வேறு எந்த ஒரு சக்தியைக் காட்டிலும் வலி மையுடையதாகும். இந்தக் கண்ணோட்டத்தில் ரக்ஷா பந்தன் ஒரு அபூர்வமான, ஒப்பற்ற, விந்தையான பண்டிகை என்று சொன்னால், அதுமிகையல்ல. ஒரு சகோதரி தன் சகோதரனின் கையில் அன்போடு ராக்கி அணிவிக்கும் அந்தக் காட்சி, அங்கு குழுமியிருக்கும் அத்தனை நெஞ்சங்களிலும் அச்சமயம் இடம் பிடித்துக் கொள்ளும், இனம் புரியாத அன்புப் பரவசம் ஒரு அலாதி அனுபவம். ஆதலால் இந்தப் பண்டிகை நாளன்று ஒவ்வொரு சகோதரியும், ஒவ்வொரு சகோதரனும், இந்த நாள் ஒரு சுபமான, மங்களகரமான நாள் என்றே கருதுவர். மேலும் நெற்றியில் சந்தன திலகமிட்டு, ராக்கி அணிவித்து, வாயில் இனிப்புப் பண்டமும் ஊட்டிவிடும் அந்த இனிய நிகழ்ச்சி, மக்களிடையே மகிழ்ச்சியுடன் கூடிய அன்பான நல்லுறவை மலரச் செய்யும் என்பது உறுதி என நம்பலாம்.

### நமக்கு உத்தரவாதமுள்ள, உறுதியான பாதுகாப்பு எது ?

உலகம் மிகப் பெரியது. நாடுகளோ எண்ணிலடங்கா. எனினும் அங்கு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அனைவருமே யாராயினும் நம்மைப் போன்ற மனிதர்களேயாவர். ஆதலால் மனிதன் எங்கிருந்தாலும் அவனுடைய அத்யாவசியமான தேவை என்பது ஒரே மாதிரியானது தான். பசிக்கு உணவு, உடுத்த உடை, இருக்க இடம். என்றாலும் மனம், அவனை நிம்மதியாக இருக்க விடுவதில்லை ஆதலால் நாம் என்ன செய்யப் போகிறோம்? நாம் அனுபவசாலிகள் தான். ஆனாலும் நடைமுறைகளில் மாற்றம் வேண்டும். உண்மை ஓங்கி நிற்க வேண்டும். பெரும்பாலும் நாடுகளுக்கிடையே முரண்பாடுகளே அதிகம். இன்றைய நாட்டு நடைமுறை எப்படி இருக்கிறது? வல்லரசு நாடுகளின் நிலை என்ன? சக்தி வாய்ந்த இராணுவ பலம், தேவைக் கதிகமான ஆயுதபலம், ஆற்றல் மிக்க தளபதிகள், செல்வாக்குள்ள இராஜ தந்திரம், புகழ் பெற்ற விஞ்ஞானிகளும் கூட இருக்கின்றார்கள் என்று எண்ணக் கூடும். ஆனால் இவையெல்லாம் தகர்த்தெறிய முடியாத தற்காப்பு சாதனங்கள் ஆக முடியுமா? ஊடுருவ முடியாத பாதுகாப்பான அரண்கள் என்ற எண்ணமும் தவறான முடிவாகவே இருக்கும். ஏனெனில் இரண்டு உலகப்போர்கள் நடந்து முடிந்து விட்டன. மூன்றாவது உலகப் போருக்கும் தயாராகவே இருக்கிறோம். அழிப்பதற்கென்றே தயாரிக்கப் பட்ட யுத்த தளவாடங்கள் உபயோகிக்கப்படாமல் வீணாகிவிட யாரும் சம்மதிக்கப் போவதில்லை. முதலாம் உலகப் போரின் முடிவில், அழிவைக் கண்டு அஞ்சி நடுங்கிய வல்லரசுகள் கூடிப் பேசி, இனி யுத்தமே செய்யப் போவதில்லை என்று தீர்மானித்தனர். ஆனால் நடைமுறை என்ன? ஒரு சில ஆண்டுகளிலேயே இரண்டாம் உலகப்போர் நடந்து முடிந்தது. அழியப் போகிறோம் என்பது தெளிவாகத் தெரிந்த பின்னரும், நிலை மாறவில்லை. இதன் மூலமாக நாம் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொள்வது என்ன? **மனிதனிடம் மாசுகள் உள்ளவரை,**

**அவனுக்கு நிம்மதி இல்லை.** வாழ்க்கையும் நரகமே என்பது தான்.

இறைவா ! எனக்கு நன்மதியைக் கொடு என இறைஞ்சிப் பெறுவார்களா? இதைத் தவிர வேறு வழி இல்லை. அதாவது இப்போதாவது. **மனிதன் தனக்காகப் பண்புகளைப் பற்றிக் கொள்ளாதவரை நிம்மதி என்பது இருக்க முடியாது.** உதாரணமாக நோய் வாய்ப்பட்ட ஒருவர், மருத்துவர் இடும் கட்டளைப்படியே நடக்கச் சித்தமாகி விடுகிறார் அல்லவா? இப்போது, **இப்படித்தான் வாழ வேண்டும் என்பது இறைவன் கட்டளை.** இதன்படி நடப்பதைத் தவிர மனிதனுக்கு வேறு வழி ஏதேனும் உண்டா?

ஆதலால் இறைவன் கட்டளையை சிரமேற் கொள்வோம். ரக்ஷா பந்தன் பண்டிகையை வரப்பிரசாதமாக ஏற்போம். இதன் அடையாளமாக ராக்கி அணிந்து கொள்வோம். நமக்காக உறுதிமொழியும் எடுப்போம். அதன்படி நடப்போம். இதற்காக பரமாத்மாவை நினைவு செய்வோம். இந்த நினைவு தான் தவம். இத்தவத்தின் மூலமாக இறைவனிடமிருந்து பெறும் சக்திதான் நமது பாதுகாப்புக் கவசம். இவ்வாறு பரமாத்மாவின் பாதுகாப்பை ஏற்போமேயானால் நம் வாழ்க்கை மீண்டும் சாரமுள்ளதாக, உற்சாகமும், மகிழ்ச்சியும் அளிப்பதாக ஆகிவிடும். என்பதில் எந்த ஒரு ஐயமுமில்லை.

இந்த நல்லெண்ணத்தில், ஆன்மீக அன்பும், மரியாதைக்கும் உரிய சகோதரி நம் கையில் அணிவிக்கும் ராக்கி ஆத்ம சுதந்திரத்திற்கு சகோதரி மூலமாக இறைவன் நமக்களிக்கும் சன்மானம் என மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வோமாக !

**கேள்வி: நான் சிலகாலமாகவே யோகம் பயின்று வருகிறேன். இப்போது நான் சைவ உணவு மட்டுமே சாப்பிடுகிறேன். இதுவரையிலும் அசைவ உணவு தயார் செய்த பாண்டங்களை உபயோகிக்கலாமா? அல்லது புதுப்பாத்திரங்கள் வாங்கி உபயோகிக்க வேண்டுமா?**

**பதில்:** அசைவ உணவு சமைத்த பாண்டங்களை மிக நன்றாக சுத்தம் செய்து விடவேண்டும். மீண்டும் அதை அசைவ உணவு தயார் செய்வதற்காகப் பயன்படுத்தலாகாது. அவ்வளவு தான். இது வரை அசைவ உணவு சாப்பிட்ட வயிரைத்தானே சைவ உணவு சாப்பிடப் பயன்படுத்தப் போகிறோம்!

**கேள்வி: உணவுக்காகப் பிராணிகளைக் கொல்வதால், அவை துன்பப்படுகின்றன. ஆதலால் இது பாவம், கூடாது என்கிறீர்கள். சரி தான். மனிதன் தினந்தோறும் ஆயிரக்கணக்கான எறும்புகளைத் தன் காலடியில் மிதித்துச் சாகடித்துக் கொண்டிருக்கிறானே, இது பாவமில்லையா?**

**பதில்:** உணவுக்காகப் பிராணிகளைக் கொல்வது என்பது முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்யப்படும் செயல். ஆனால் மனிதனுடைய கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கும் எறும்புகளைப் போன்று சிறுசிறு ஜந்துக்கள் காலடியில் மிதிப்பட்டு மடிந்து போவது உண்மை தான். அவ்வாறு மிதிக்க வேண்டுமென்பது மனிதனுடைய நோக்கமல்ல. இதற்காக அதிக பட்சம் மனிதன் கவனப்பிசகாக அல்லது அஜாக்கிறதையாக அல்லது அலக்ஷியமாக நடந்து கொண்டான் என்ற குற்றத்திற்கு ஆளாகலாம். இதைத்தவிர்க்க முடியுமானால் மிகவும் நல்லது தான். ஆனால் இதை வைத்து பிராணிகளை உணவுக்காக கொல்லும் செயலை நியாயப்படுத்த முடியாது.




இனிமையான குழந்தைகளே !

எனதருமை வாரிசு குழந்தைகளாகிய நீங்கள் தூய அன்னப் பட்சிகள். இவ்வாறாக மாறியிருக்கின்றீர்கள் என்பதை உங்களால் உணர முடிகிறதா? அன்னப்பட்சிகள் எப்போதும் முத்துக்களையே பொறுக்கும் தன்மையுடையது. ஒருபோதும் கற்களைப் பொறுக்கு வதில்லை. இதுபோலவே நீங்களும் பிறரிடமிருந்து நற்குணங்களையே கிரஹிக்கின்றீர்கள் அல்லவா ! இதற்கு ஆதாரமாக இருப்பது உங்களிடமுள்ள தூய்மையான புத்தி மற்றும் சுப பாவனை. எப்போது உங்களுடைய புத்தி, பார்வை, பேச்சு, நோக்கம் சிரேஷ்டமானதாக ஆகிவிடுகிறதோ அப்போது நீங்கள் தூய அன்னங்களாக பிரத்யக்ஷ மாகி விடுவீர்கள். ஆதலால் ஒவ்வொரு வினாடியும், அவ்வாறு ஆகிக் கொண்டிருக்கிறோமோ? என சோதித்துக் கொண்டே இருங்கள். ஏனெனில் அந்த இலட்சியத்தை அடைவதற்கான நேரம் மிக அதிகமாயில்லை.

அமைதியை அனுபவம் செய்வது அவ்வளவு எளிதாக இல்லை.
ஏனெனில் அமைதிக்கு அருகாமையிலிருந்தும், அதை வெளியில் தேடுகிறோம்.

ஆத்மா என உணருங்கள், அன்பின் உருவாய் மலருங்கள்



# ஸ்ரீமத் பகவத் கீதையின் சத்திய சாரம்சம்

(பிரம்மா குமாரிகள்ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம்)

## கீதை பற்றிய பொதுவான நம்பிக்கைகள்

மகாபாரத நூலில் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் மகாயுத்தம் நடந்ததாக வர்ணிக்கப்பட்டுள்ளது. யுத்த மைதானத்தில் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்தார் என்பதாகவும் இருக்கின்றது. ஆரம்பத்தில் மகாபாரத நூல் இன்றிருக்கும் உருவில் இல்லை என்றும், இதன் பெயர் முதலில் ஜய என்ற பெயரில் விளங்கியதாகவும், அப்போது இதில் எண்ணாயிரம் சுலோகங்களே இருந்தது என்றும், பின்னர் இதன் பெயர் பாரதம் என்றும் மகாபாரதம் என்றும் விளங்கி வரலாயிற்று. நாளடைவில் இதில் சுலோகங்கள் படிப்படியாகச் சேர்க்கப்பட்டு, இன்று இதன் எண்ணிக்கை ஏறக்குறைய ஒரு லட்சம் வரை இருக்கலாம் எனக்கருதப்படுகிறது. இந்தக் கணக்குப்படி இந்த நூல் காலப்போக்கில் பதின்மூன்று மடங்கு வளர்க்கப்பட்டிருக்கிறது என்பது விளங்கும்.

இத்தகைய சூழ்நிலையில் எது உண்மை, எது கற்பனை அல்லது இடைச் சேர்க்கை என்ற சிக்கலை விடுவிப்பது மிகவும் கடினமே- ஆதலால் கீதை அருளியவரைத் தவிர வேறு யாராலும் கீதையின் யதார்த்தமான இரகஸ்யத்தை அறிவிக்க முடியாது. எனினும், மீண்டும் பகவான் தனது அவதாரத்தின் வாயிலாக கீதை ஞானம் பற்றி என்ன உபதேசிக்கின்றார் என்பதைப் பார்ப்போம். கீதையின் சத்திய சாராம்சத்தை அறிந்து கொள்வதற்கு இது மிகவும் உதவியாயிருக்கக் கூடும்.

## மனோ விகாரங்கள் மீதான யுத்தம்

பகவான் மனிதனுக்கு தூய்மையாகவும், நிர்விகாரியாகவும் (தீய குணங்களிலிருந்து விடுபட்ட) தெய்வீக சம்பிரதாயம் மற்றும் ஆன்மீக ஸ்திதியில் நிலைத்த யோகியாக வாழ்வதற்கே கீதை ஞானம் அளித்தார். அதாவது மனிதன் ஞானம் எனும் கூரிய வாள் கொண்டு காம விகாரம் எனும் எதிரியை மாய்க்க வேண்டும் என்றும், யோக பலத்தின் மூலம் கர்மேந்திரியங்கள் மீது வெற்றி கொள்ளவும், ஆன்மீக சக்தியால் காமம், கோபம், பேராசை போன்ற தீய குணங்களைத் தோற்கடிக்கவுமே விலை மதிக்கமுடியாத ஞானம் அருளினார். இந்த ஞானம் அருளியது ஒருவருக்கு மட்டுமல்ல. எல்லோருக்கும் பொதுவானது என்பது விளங்குகிறது. எனினும் மக்கள் எளிதில் புரிந்து கொள்வதற்காகவே யுத்த காண்டமாகக் கற்பிக்கப்பட்டிருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

## கீதை துவாபர யுகத்தின் இறுதியில் உபதேசிக்கப்பட்டதா ?

கீதை ஞானம் அருளியதன் குறிக்கோளைப் புரிந்து கொண்டால் கீதை உபதேசிக்கப் பட்டது எப்போது என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியும். கல்பகாலம் எனும் சக்கரத்தில் சுழலும் யுகங்கள் சத்யுகம் (கிருதயுகம்) திரேதா யுகம், துவாபரயுகம், கலியுகம் எனப்படுகிறது. இதன்படி துவாபரயுகத்தை அடுத்து வரும் யுகம் கலியுகம். இப்போது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் யுகம் கலியுகம். இந்த யுகத்தின் அனுபவம் என்ன? கலியுகத்தில் தர்மத்தின்

சுவடுகள் மறைந்து, அசுர லட்சணங்கள் ஒன்றன் பின் ஒன்றாகப் பெருகி அதர்மத்தின் கை ஓங்கியிருக்கும் யுகம். பகவான் அதர்மத்தை அழிக்கவும், தர்மத்தை மீண்டும் ஸ்தாபனை செய்யவும் அவதாரம் செய்கின்றார். கீதை ஞானம் அருளுகின்றார். இதன் ஆதாரத்தில் அதர்மம் அழிகிறது. தர்மயுகம் (சொர்க்கம்) ஸ்தாபனையாகிறது என்பதாகும். இதற்கு முன்பு கலியுகத்தில் லட்சணங்கள் என்னவாக இருக்கின்றது என்று பார்த்தோம். கலியுகத்தை அடுத்து வரும் சத்யுகத்தில் லட்சணங்கள் எப்படி இருக்கிறது என்று பார்க்கும்போது மனிதன் தெய்வீக லட்சணங்கள் பொருந்தியவனாக, தெய்வீக சம்பிரதாயங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவனாக இருக்கின்றான். ஆதலால் இங்கு வாழ்பவர்கள் கலியுகம் போன்று சர்வ சாதாரண மனிதர்கள் அல்ல. தேவ, தேவியர்கள் அதாவது தேவதைகள் எனப்படுகின்றனர். ஆதலால் இது சொர்க்கம் எனப்படுகிறது.

**இதன்படி பகவான் கீதை உபதேசிப் பதற்காக அவதரித்த காலம் சத்யுகம் பிறப்பதற்கு சற்று முன்பு அல்லது கலியுகத்தின் இறுதியான நேரத்தில் தான் என்பது தான் சரியானதாக இருக்கும்.**

## கீதை உபதேசம் செய்தது யார் ?

ஸ்ரீமத் பகவத் கீதை நூலின் ஆரம்பத் திலேயே, மயில் தோகை அலங்கரிக்கும் மகுடம் அணிந்த ஸ்ரீ கிருஷ்ணருடைய உருவம் சித்தரிக்கப்பட்டிருப்பதன் காரணமாக, கீதை அருளிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் என்ற நம்பிக்கை உண்டாகிவிட்டது. இவ்வாறான நம்பிக்கையுடையவர்கள் கீதை ஞானத்தின் மூலக் கருத்தை புரிந்து கொள்ளவே இல்லை என்பது தெளிவாகிறது. அதாவது தேகம் மற்றும் தேகி (ஆத்மா) அல்லது க்ஷேத்திரம் (இருப்பிடம்) மற்றும் க்ஷேத்திர (க்ஞ)..... (ஜீவாத்மா) இவற்றைப் புரிந்து கொள்வது அவசியமாகிறது. எப்படி, ஆத்மா எனும் சொல் தேகத்தைக் குறிப்ப தாகாதோ, அதைப் போல பரமாத்மா அல்லது பகவான் என்ற சொல்லும் தேகதாரியை அதாவது தேகமுள்ளவரைக் குறிப்பதாகாது.

ஆதலால் தேக ரூபத்தில் மயில் தோகை மகுடதாரி பகவானுடைய ரூபமில்லை என்றா கிறது. அப்படியானால் பகவானுடைய சொரூபம் எப்படியிருக்கும்? இதை அறிவதற்குமுன், ஆத்ம சொரூபத்தைப் பற்றி அறிய வேண்டும். ஆத்மா வின் சொரூபம் ஜோதி புள்ளி வடிவம் ( பாய்ண்ட் ஆப் லைட் ) பரமாத்மா ஆத்மாக்களிளெல்லாம் அதி சிரேஷ்டமானவர். அவருடைய சொரூபமும் ஜோதி வடிவமேயாகும். மேலும் இப்பிரபஞ்சம் பற்றிய முழு ஞானமும் அவர் ஒருவரிடம் மட்டுமே உள்ளது. குணங்களில் அதி சிரேஷ்ட மானவராகவும், கடலாகவும், சக்தியில் சர்வ சக்தி வானாக ஆல்மைட்டி அதாரிட்டியாகவும் இருக்கின்றார். கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான விசயம். பகவானுடைய உருவம் ஸ்ரீ கிருஷ்ணரைப் போன்றோ அல்லது வேறொரு சரீர உருவைக் கொண்டதாகவோ இருக்குமானால் பகவானை திவ்ய திருஷ்டி மூலமே காண முடியும் என்று கூறவேண்டிய அவசியம் என்ன?

ஆத்மாவைப் போன்றே பரமாத்மாவின் சொரூபமும் ஜோதி புள்ளி வடிவமாதலால், பாரதத்தில் அசரீரியாக சிவலிங்கம் என்ற உருவில் சிவா என்ற பெயரில் வழிபாடுகள் நடக்கின்றன. அகிலம் முழுமைக்கும் கல்யாண காரியாக இருப்பதன் காரணமாக சிவா எனும் காரணப் பெயர் பிரசித்தமாக உள்ளது. மேலும் மகாதேவ் சங்கருடைய உருவத்தை ஒத்ததல்ல என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும்.

## கீதை பற்றிய மகத்துவம் வாய்ந்த இரகசியங்கள்

கீதையில் பகவான் அநேகவிதமான பெயர்களால் வர்ணிக்கப்பட்டிருக்கின்றார். இவற்றுள் ஸ்ரீ கிருஷ்ணர் என்ற பெயரும் அடங்கும். இதன் காரணமாகவும் கீதை உபதேசம் செய்தது ஸ்ரீகிருஷ்ணர் என்று

கருதியிருக்கக் கூடும். பொதுவாக பகவானுடைய பெயர் அல்லது குண விசேஷம் அல்லது மகிமை போற்றுவதாகவே சூட்டப்பட்டிருப்பது விளங்கும், ஆதலால் பகவத் கீதையில் பகவானை குறிப்பதாகவுள்ள ஸ்ரீ கிருஷ்ணர் என்பது ஒரு சரீரமுள்ள நபரைக் குறிக்கும் பொதுவான பெயரல்ல. மேலும் சியாமள வர்ணன் என்ற நிறத்தைக் குறிக்கும் பெயரும் பொருந்தாது. ஏனெனில் பகவான் ஒருபோதும் நீல நிறமடைவதில்லை. பகவானுடைய ரூபம், ஜோதி சொரூபமாகும். கீதை மகாவாக்கியத்தின் படி பகவான் சூரியனைப் போன்று பிரகாசமாக விளங்குபவர் என்பதாகும். திவ்ய திருஷ்டி மூலமே பார்க்க முடியும் என்று கூறப்படுகிறது. ஆதலால் சியாமள வர்ணன் என்ற அர்த்தத்தில் கிருஷ்ணர் என்ற பெயரால் பகவான் வர்ணிக்கப்படவில்லை. மாறாக பகவான் ஆகர்ஷண மூர்த்தி ஆனந்த சொரூபன். அதாவது தியானம் செய்பவர்களின் பாவங்களை நிவாரணம் செய்யக் கூடிய அந்த அர்த்தத்தில் தான் ஜோதி புள்ளிவடிவில் பிரகாசிக்கக் கூடிய பரமாத்மா, அவரது குணம், கடமை மற்றும் ஆத்மீக ரீதியாக கிருஷ்ணர் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறார் என்பதே பொருத்தமானதாகும். இன்னும் சிந்தித்தோமானால், கிருஷ்ணர் என்ற பெயர் குண விசேஷம் மற்றும் கடமையின் அடிப்படையிலல்லாமல், சரீரமுள்ள ஒரு நபருக்கே இடப்பட்டதாக இருந்திருந்தால், அப்பெயரே தொடர்ந்து பிரயோகப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறின்றி ஜனார்த்தனன், கேசவன், ஹிருஷிகேஷ், கோவிந்தன், அச்சுதன் என்ற பெயர்களெல்லாம் பிரயோகம் செய்யப்பட்டிருப்பது கவனத்திற்குரிய விசயமாகும். இப்பெயர்கள் எல்லாமே சொரூபத்தை உணர்த்தும் அறிமுகமாக அமைந்திருக்கும் போது, கிருஷ்ணர் என்ற பெயர் மட்டும் ஒரு சரீரமுள்ள வரைக் குறிப்பதாக அர்த்தம் செய்வது, உசிதமற்ற முடிவாகும். அதாவது மக்களுடைய பிரார்த்தனையை ஏற்பவன் என்ற காரணத்தினால் ஜனார்த்தனன் என்றும், பிரம்மா, விஷ்ணு, சங்கர் மூலமாகக் கடமையாற்றுவதன் காரணமாக கேசவன் என்றும், அழைக்கப்படுகின்றார். இதைப் போலவே ஆனந்த சொரூபன் அதாவது ஆகர்ஷண மூர்த்தியாக இருப்பதன் காரணமாகவே கிருஷ்ணன் என்ற சொல் பிரயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மகிமைக்குரிய உருவம் ஜோதி சொரூபம் என்பதை மறந்துவிடலாகாது.

### அர்ஜுனன் யார் ?

எப்படி கிருஷ்ணன், ஜனார்த்தனன், கேசவன் என்ற பெயர்கள் ஜோதி புள்ளி வடிவான பகவானுடைய குண விசேஷத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறதோ, அதுபோல, அர்ஜுனனுக்கு அனகன், பரந்தபன், குடாகேஷ் என்ற பெயர்களும் உண்டு. அர்ஜுனன் என்பதும் இதர பெயர்களும் குண விசேஷத்தின் அடிப்படையிலானதாகும். பாவத்தால் தீண்டப்படாதவன் என்பதால் அனகன் என்றும், நித்திரையை வென்றவன் என்பதால் குடாகேஷ் என்றும், தவம் செய்யும் யோகி என்ற பெயரில் பரந்தபன் என்றும் தூய்மை மற்றும் அகத்திற்கான முயற்சியில் ஈடுபட்டவன் என்பதால் பாரத் என்றும் வழங்கும் பெயர்கள் அர்ஜுனனுக்கே உரித்தானவைகளாகும். இதே போன்று தூய்மையுள்ளவன் அல்லது புனிதமானவன் என்ற சொல் பிரம்மாவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. கீதை ஞானம் பிரஜாபிதா பிரம்மாவின் சரீர ஆதாரத்தின் மூலமாக, வழங்கப்பட்டதன் காரணமாக, பிரம்மா, ஞானிகளிலெல்லாம் சிரேஷ்டமானவர் எனக் கருதப்படுகின்றார். கீதா ஞானம் உபதேசம் செய்வதற்காக ஜோதி புள்ளி வடிவான பரமாத்மாவாகிய சிவன் பிரம்மாவின் சரீரத்தில் அவருடைய ஆத்மாவின் பக்கத்தில் ஒன்றாக அமர்ந்தார் என்ற காரணத்தால் பிரம்மா ஆதிபிதா என்றும் ஜெகத்பிதா என்றும் பாகீரத் என்றும் மகிமைக்குரிய வரானார்.

## அர்ஜுனனுடைய ரதம்


கீதை ஞானத்தில் சரீரம் ஆத்மாவின் ஆடை அல்லது வீடு என்று கூறப்படுகிறது. இதுபோல சரீரம் ஒரு ரதத்திற்கு உவமான மாகவும் சொல்லப்படுகிறது. மனம் இந்த ரதத்தின் குதிரைகள். உபதேசம் அல்லது ஞானம் கேட்கின்ற நரன் அல்லது மனிதன் குதிரைகளின் லகானாகிய புத்தியை பகவானிடம் ஒப்படைத்து விட வேண்டும். பிரஜாபிதா பிரம்மாவுக்கு அர்ஜுனன் என்ற பெயரும் உண்டு. என இதற்கு முன் தெரிந்து கொண்டோம். இவருடைய சரீரத்தில் தான் ஜோதி புள்ளி வடிவான பகவான் அர்ஜுனனுடைய சாரதி யானார். சாரதி என்பதன் பொருள் ஒரே ரதத்தில் இருவர் சவாரி செய்தல் என்பதாகும். அர்ஜுனன் அதாவது **பிரம்மாவின் சரீரத்தில்** ஏற்கனவே அந்த சரீரத்தை ஆட்கொண்ட ஆத்மா உள்ளது. இப்போது பகவானும் ஜோதி புள்ளி வடிவில், அதே சரீரத்தில் அந்த ஆத்மாவுடன் பக்கத்தில் அமர்ந்து அதன் வாய் மூலமாக கீதை ஞானம் உபதேசித்தார். பிரம்மாவாகிய அர்ஜுனன் மட்டுமல்லாது, இதைக் கேட்ட மனிதர் யாவரும் ஞானப்பிறவி எடுத்தனர். அதாவது இதுவரை வாழ்ந்து வந்த வாழ்க்கைக்கும், இப்பொழுது வாழ்கின்ற வாழ்க்கைக்கும் இரவு பகல் வித்தியாசமுள்ளது. ஆகவே இது மறுபிறவியாகக் கருதப்படுகிறது. இதனையே பிரம்மாவின் வாய் மூலமாகப் பிராமணர்கள் பிறந்தார்கள் எனக் கூறப் பட்டுள்ளது. ஆனால் ரதம் மற்றும் சாரதி என்பதன் உட்பொருளை ஏதோ ஒரு காரணத் தால் சாஸ்திரம் எழுதியவர்கள் சக்கரங்களும், குதிரைகளுமுடைய ரதத்தில் ஸ்ரீகிருஷ்ணரை சாரதியாக்கி விட்டனர். ஆகவே அர்த்தம் அனர்த்தமாகிவிட்டது.

## கீதை ஞானமும், கலியுகமும்

பகவான் ஒரே ஒரு அர்ஜுனனுக்கு மட்டும் கீதை உபதேசம் செய்யவில்லை. மாறாக அர்ஜுனனாகிய பிரம்மாவின் வாய் மூலமாக மனித குலம் அனைத்திற்குமே கீதை ஞானம் போதித்தார் என்பதாகும். கலியுகத்தின் இறுதியில் **பெரும்பாலான பெண்கள் மானபங்கம் செய்யப் படுவதும், மனிதன் சூதாட்டத்திலும், மது, போதைப் பொருள் உட்கொள்ளல் மற்றும் கேளிக் கைகளிலும் ஈடுபட்டு நடத்தை கெட்டுத் திரிவதும், பொருத்த மற்ற உணவுப் பழக்கங்கள் நேர்மையற்ற விவகாரங் கள் மூலமாக அதர்மம் மேலோங்கி விடுகின்றது.**

இன்றைய இந்த நிலை பற்றி ஒரு கணம் சிந்திப்போமேயானால் **மனிதன் தானாகவே உருவாக்கிய அசுர சுபாவத்தால் ஆட்டிவைக்கப் படுகின்றான் என்ற உண்மை புலப்படும்.** ஒரு பக்கம் இந்த அசுரப் படைப்பின் மகா விநாசத் திற்கான பயங்கர ஆயுதங்கள், மறுபக்கம் பகவான் அருளிய ஞானமும் சகஜ இராஜயோகக் கல்வியும் நடக்கின்ற போட்டி எனலாம். அதாவது ஒருபக்கம் **துரியோதனன், துச்சாதனன், திருதராஷ்டிரக் கௌரவர்கள் தயார் நிலையில் இருக்கின்றார்கள். மறுபக்கம் பகவானுடைய அவதாரத்தைப் புரிந்துக் கொண்டு அவரிடம் அன்பு கொண்டு, அவரது அன்புக்கட்டளையை சிரமேற்கொண்டு நடக்க சித்தமாகி, அவரைச் சார்ந்துள்ள பாண்டவர்கள், ஞானம் மற்றும் யோக பலத்தின் மூலம் காமம், கோபத்தின் மீது வெற்றி யடைவதற்காக இரகசியமாக அஹிம்சை யுத்தம் செய்து கொண்டிருக்கின்றனர் - ஸ்ரீமத் பகவத் கீதையின் சத்திய சாராம்சத்தை இந்த கோணத்தில் புரிந்து கொண்டால், இதன் முழுப்பயனையும் அடைய முடியும்.**

சாட்சியாக நடப்பவர்கள் பந்தனத்தில் சிக்குவதில்லை. கர்மம் அல்லது கர்மேந்திரியங்களின் வசப்பட்டிருக்கிறார்கள் எனில் சாட்சி நிலையில் இல்லை என்று பொருள்.



# தாதி பிரகாஷ்மணிஜி

## அன்னாரது பிரேரணைகள்

நாம் அனைவரும் நமக்குப் பிரியமானவரும், பேரன்பிற்குரியவருமான பரம தந்தை பரமாத்மா சிவ பாபாவை தந்தையே ! நீங்கள் அன்பின் கடலாக விளங்குகின்றீர்கள் என மகிமை செய்கிறோம். இது போலவே அவர் ஞான சாகரமாகவும் இருக்கின்றார். இவ்வளவு அன்பிற்குரிய தந்தை நமக்குக் கிடைத்துள்ளார். அவர் தான் எல்லோருக்கும் முக்தியும், ஜீவன் முக்தியும் அளிப்பவராக இருக்கின்றார். ஞானக் கடலான அந்த தந்தை தான் ஞான மழையும் பொழிந்து கொண்டிருக்கின்றார். அப்படியானால், உங்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும், எனக்கு அப்படிப்பட்ட அன்பான தந்தை அன்பை வரமாக அளித்துள்ளார் என்ற அனுபவம் உண்டாகிறதா ? இந்த அன்பை உலகினரின் அன்போடு ஒப்பிட முடியாது. இவ்வாறு தந்தையின் அன்பில் மூழ்கி இருந்தீர் களானால் எளிதாகவே நஷ்டமோஹா அடைந்து விடலாம். மேலும் உள்ள பூர்வமாக பாபாவிடம் அன்பு இருக்குமானால், லௌகீக உலகிலிருந்து நஷ்டமோகா அடைவது ஒன்றும் பெரிய விசயமுமில்லை. ஏனெனில் உள்ளம் என்பது ஒன்று தான். அந்த உள்ளத்தில் இருப்பது யார்? பிரபுவா? அல்லது லௌகீக பரிவாரத்தினரா? உள்ளம் என்பது ஒரு கோவில். இந்த கோவிலில் ஒன்று பாபா அமருவார் அல்லது சம்மந்தி. ஒருவேளை உள்ளத்தில் லௌகீக பரிவாரத்தின் அநேக சம்மந்திகள் இருப்பார் களேயானால், அநேக விதமான பிரச்சனை களையும் தவிர்க்க முடியாமல் போய் விடும். இவ்விதமான குழப்பத்தில் இவர் இங்குமங்குமாக தன்னையே இழந்து விடுகிறார்கள். இதனால் தான் சிலர் உள்ளம் சுக்கு நூறாக உடைந்து விட்டது என்றும் கூறுகின்றனர். **காரணம் என்னவெனில் உள்ளத்தை பலரிடம் பகிர்ந்து கொடுத்து விட்டோம்.** இதைத்தான் மோக வசப்பட்டு விடுவது எனக் கூறுகின்றோம். தகராறுகளும் உண்டாகி விடுவதுண்டு. மனம் உடைந்து போய் விட்ட அனுபவமும் உண்டாகலாம். இவ்வாறாக புத்தி சிக்கிக் கொண்டு விட்டால், எனக்கு பதிகளுக்கெல்லாம் பதி, தேவ தேவர்களுக் கெல்லாம் மகாதேவ், மாதாக்களுக்கெல்லாம் மாதா, பிதாக்களுக்கெல்லாம் பிதா, பிரபுவானவர் கிடைத்துள்ளார். என்றும், எனக்கோ ஒரே ஒரு சிவபாபாவைத் தவிர வேறுயாருமில்லை என்ற நிச்சயம் உள்ளத்தில் இருக்குமா ?

ஸ்ரீமத் கூறுகிறது, நாள் தோறும் தவறாமல் முரளி கேட்க வேண்டும். வைகறையில் துயில் எழ வேண்டும், ஞான ஸ்நானம் செய்ய வேண்டும். ஈஸ்வரிய மரியாதைகளின் படி நடக்க வேண்டும். தூய்மையாக இருக்க வேண்டும். பிராமண குலத்தின் பெருமை காக்க வேண்டும். மற்றவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் எல்லோருக்கும் பாபாவின் அறிமுகத்தைக் கொடுக்கும் சேவை செய்ய வேண்டும். இவையெல்லாம் ஸ்ரீமத் ஆகும்.

தாதி பிரகாஷ் மணி




# கடவுள் வந்துவிட்டார் ...

## சொர்க்கம் வந்து கொண்டிருக்கிறது

மனிதர்களுடைய நீண்ட கால விருப்பம் இறைவனை அறிந்து கொள்ள வேண்டும் என்பதாகும். பல மத குருமார்கள், தத்துவ ஞானிகள், இறை வழிபாட்டு முறைகள், வேத சாஸ்திரங்கள், புனித யாத்திரை மற்றும் பலதரப் பட்ட நம்பிக்கைகள் மூலமாக கடவுள் என்ற சொல் பிரசித்தமானது. எனினும் மனிதர் களால் புரிந்து கொள்ள முடியாத ஒரு இரகசிய சக்தி யாகவே கடவுள் இருக்கின்றார். இருப்பினும் கடவுள் மீதான நம்பிக்கை கலியுகம் என்றழைக்கப்படுகின்ற இன்றைய கால கட்டத்திலும் மிகவும் வலுவாகவே உள்ளது என்பது நிதர்ஷணம்.

பல பிறவிகளாக பல வித காரணங் களுக்காக துன்பங்களிலிருந்தும் வேதனை களிலிருந்தும் விடுபட, அமைதி பெற, மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை வாழ, உண்மை அறிய, இறைவனின் துணை வேண்டினர். இப்படியாக பல மன விருப்பங்களுடன் கடவுளை வழிபட்டு வந்துள்ளனர். புரிதல் இல்லாமை யால் கடவுள் நம்பிக்கையின் காரணத்தால் கடவுள் சம்மந்தப்பட்ட கற்பனை யான கதை களையும் தங்கள் பிரத்யேக அனுபவங் களையும் கண்ட கனவுகளையும் பற்றிக்கூறி வந்துள்ளனர்.

அநேக இறை தூதுவர்கள், சமய நூல்கள் மற்றும் நம்பிக்கையூட்டும் சொற்பொழிவுகள் மூலம் கடவுள் என்றாவது ஒரு நாள் ஏதாவது ஒரு வடிவத்தில் அவதரிப்பார் எனக் கூறிக் கொண்டிருந்தார்கள். இந்துக்கள் பரம்பரையாக வழி வந்த நம்பிக்கையின் அடிப்படையில் பாவங்களிலிருந்தும், துயரங்களிலி ருந்தும் விடுபட உருவ வழிபாட்டை மேற்கொள்ள ஆரம்பித்தனர். கடவுள், மானிடர்களை தீய செயல்கள், பந்தனங்கள், கஷ்டங்கள் முதலானவைகளிலிருந்து விடுவிப்ப தற்காக கலி யுக் இறுதியில் சங்கம யுகத்தில் இப்பூமியில் அவதரிக்கிறார்.

பல மதங்கள் நம்பிக்கையின் அடிப்படை யில் இறைவனைப் பற்றியும் அவரது அவதாரத்தைப் பற்றியும் வெவ்வேறு விதமாகக் கூறினர். உதாரணமாக இந்துக்கள் கலியுகத்தின் முடிவு இன்னும் பல ஆயிரம் ஆண்டுகள் உள்ளன, ஆகவே கடவுள் அவதரிக்க ஆயிரக் கணக்கான ஆண்டுகள் ஆகும் என்ற நம்பிக்கை யிலேயே இருந்தனர்.

கிறிஸ்துவர் மற்றும் இஸ்லாமியர்கள் நியாயத் தீர்ப்புகள் (ஜட்ஜ்மெண்ட் டே) என்பதுதான் கணக்குத் தீர்க்கும் சமயம் என்கின்றனர். இதற்காக இறைவன் சரியான, அவசியமான காலத்தில் பூமியில் அவதரிக்கின்றார். அவருடைய அவதாரம் நன்மை அளிக்கக்கூடியது, கருணை நிறைந்தது மற்றும் உலக மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது என்ற நம்பிக்கையும் இருக்கின்றது.

அவர் வருகைக்காக நீண்டகாலமாக நம்பிக்கையுடன் மிக முக்கியமான அந்த தருணத்தை எதிர் பார்த்துக் கொண்டுமிருந்தனர்.

மனிதர்கள் ஏக்கத்தோடு காத்திருந்த அந்த நிகழ்வு மனித சரித்திரத்தில் இப்போது நடந்தே விட்டது. வேத சாஸ்திரங்களில் கலியுகம் எப்படியிருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளபடி அத்தகைய அறிகுறிகளை நாம் கண் கூடாக

இப்போது காண்கிறோம். இறுதியாக இறைவனே நேர்முகமாக ஒரு மனித சரீரத்தில் பிரவேசித்து மனித குல மேம்பாட்டுக்கு அவசியமான ஆன்மீக ஞானத்தை அருளுகின்றார். அவர் அளித்த ஞானத்தால் தங்களது உண்மையான தனித்துவ ஆத்மீக மேன்மையை அறிந்து கொள்ளும் ஞானக் கண்ணைப்பெற்றனர். ஆனாலும் இன்னமும் கூட அதிகமான மனிதர்கள் அறியாமை என்ற நித்திரையில் தான் இருக் கின்றனர். இன்று வரையிலும் கூட அவரவர் கோட்பாடு, வழிபாடு மற்றும் சடங்குகளைக் கடைப்பிடித்து இறைவனை தேடிக் கொண்டே இருப்பதும் ஒரு விந்தையான அனுபவம் ஆகும்.

பகவத் கீதையில் சுயம் பகவான் கூறுகிறார்: நான் சத்தியமான தர்மத்தை ஸ்தாபித்து அதர்மத்தை அழித்து புது உலகைப்படைப் பதற்காக இப்பூமியில் அவதரிக்கிறேன் என்று. பகவான் (சிவபாபா) படைப்பவர், சொர்க்கத்தின் இறை தந்தை என்றழைக்கப்படுகிறார். அவர் வருகையின் போது தனது முதன்மை கடமை யாக மாசற்ற மனித இனமாக தேவ தேவதை களாக மாற்றி சொர்க்கம் எனப்படுகின்ற சத்யுகத்தை இம்மண்ணில் ஸ்தாபிக்கின்றார். மனிதர்களை சரீர உணர்விலிருந்து ஆத்ம உணர்வுள்ளவராக மாறுவதற்கான வழிமுறை களை ஸ்ரீமத் தந்தருளுகிறார். மேலும் சுயராஜ்ய அதிகாரி ஆவதற்கான சக்தியளிக்கும் இராஜயோகத்தை கற்பிக்கின்றார்.

பகவான் சத்யுகம் மற்றும் திரேதாயுகத்தின் 21 பிறவிக்கான அமைதி, தூய்மை, மகிழ்ச்சிக்கான உரிமையை வழங்குகின்றார். அவரது நினைவு மூலமாகவும், காமம், பேராசை, கோபம், பற்றுதல், அகங்காரம் போன்ற விகாரங்களை வெல்வதற்காக அவர் அருளுகின்ற ஆன்மீக ஞானத்தின் மூலமாகவும் உண்மையான ஆத்மாவினுடைய இயல்பான சுபாவங்களை பெறக் கூடிய சக்தியளிக்கும் ஞானத்தை போதிக்கின்றார்.

இந்த சங்கமயுகம் தான் மனிதர்கள் அறியாமை மற்றும் விகாரங்களிலிருந்து விடு பட்டு தெளிவு பெற்று மாற்றமடைவதற்கான D LkR NUVm. **இச்சமயத்தில் தான் மானிடர்கள் தேவதைகளாக ஆவதற்கான தகுதியை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.** மனித சிருஷ்டி சக்கரத்தின் இந்த சங்கமத்தில் ஆத்ம தந்தையாகிய பரமாத்மாவையும் அவர் அருளுகின்ற ஆன்மீக கல்வியைக் கற்கவும், அவரது உண்மையான அன்பை அனுபவம் செய்யவும் முடிகிறது. சங்கமயுகம் முடிய இன்னும் சிறிது காலமே உள்ளது, பெரும்பகுதி நடந்து முடிந்து விட்டது. மீதமுள்ள கொஞ்ச காலத்தின் வாய்ப்பை நழுவ விடாமல் இலாப கரமாக பயன்படுத்தி தந்தையின் அளவற்ற அன்பை அனுபவம் செய்வோமாக. இப்போதில்லையேல் எப்போதுமே இல்லை.

1. கடவுளை அன்போடு நாடுபவர்களுக்கு அவரிடமுள்ள அதிமேலான ஞானம், குணம் மற்றும் சக்திகளை அவர் வழங்குகின்றார்.

2. கடவுள் படைப்பிற்காக அவசியமாயிருக்கின்ற அத்தனை சத்துக்களும் அடங்கிய விதை ரூபமாக இருக்கின்றார் ஆதலால் அவர் படைப்பவர். கடவுளின் தூதுவர்கள் மற்றும் துறவிகள் ஆகியோர் சீர்கெட்ட சமூகத்தில் பழுது பார்ப்பவர்களைப் போல பராமரிப்பவர்கள். ஆனால் கடவுள், உலகில் அதர்மம் உச்சகட்டத்தை அடைந்து விடும்போது, ஞானத்தின் மூலம், அன்பும் அமைதியும் நிறைந்த ஆத்ம தர்மத்தை ஸ்தாபனை செய்து நரகலோகத்தை சொர்க்க லோகமாக மாற்றுபவராக இருக்கின்றார்.

# உலகளாவிய நன்மைக்கான உன்னத பயணம்



இன்று உலக முழுவதிலும் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மிகமோசமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. வல்லரசுகள் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கான போட்டோ போட்டியில் மிக முனைப்போடு இருக்கின்றனர். இது ஒரு பயங்கரமான சூழ்நிலை என்றே தோன்றுகிறது. இன்றைக்கு உலக முழுவதிலும் உள்ள மக்கள் தொகையில் பாதிக்குமேல் பசியாலும், நோய் நொடிகளாலும், வேலை இல்லாத் திண்டாட்டத்திலும் வேதனைப் பட்டுக் கொண்டிருக்க, கோடிக்கணக்கான டாலர்கள் பயங்கர ஆயுதங்களைக் கண்டு பிடிப்பதற்காக பல ஆயிரம் விஞ்ஞானிகளுக்கும், லக்ஷோப லக்ஷம் இராணுவ வீரர்களுக்கும் நவீன ஏவுகணைகளைத் தயாரிப்பதிலும் செலவு செய்து கொண்டிருப்பது ஒரு வகையில் விசித்திரமான செயலாகவே தோன்றுகிறது. இதனால் மனித இனம் முற்றிலுமாகவே அழிந்து விடும் என்பதும் இவர்கள் அறியாததல்ல. உலகிலுள்ள எண்ணெய் வளம், தாதுப்பொருட்கள், நிலக்கரி போன்ற அனைத்து சக்திகளும் அழிவிற்கான ஆயுதங்களைத் தயாரிப்பதற்காகவே பயன் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வல்லரசு நாடுகள் சிறுசிறு விஷயங்களிலும் கூட முரண்பட்டு, ஒருவரை யொருவர் பயமுறுத்திக் கொண்டிருக்கும் சூழல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேதானிருக்கிறது. இத்தகைய சூழ்நிலையிலும் கூட ஒரு சில நாடுகள் தங்கள் அண்டை நாடுகளோடு நட்பாயிருப்பதும், அணிசேரா நிலை சார்ந்த நாடாகவும், பிறர் தலை யீடுகளிலிருந்து ஒதுங்கி வாழ்ந்து கொண்டிருப் பதையும் பார்க்க முடிகிறது. எனினும் விந்தை என்னவென்றால் ஒரே அரசியலமைப் பைச் சார்ந்த, ஒரே மதத்தைச்சார்ந்த நாடுகளுக் கிடையே கூட அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், முரண்பட்டு நிற்கும் நிலையைப் பார்க்க முடிகிறது. இன்று உலகம் அமைதியாயிருக்கிறது என்று சொல்லக்கூடிய ஒரு நாள் கூட இல்லை என்பதே இன்றைய நிலை.

வல்லரசு நாடுகளுக்கிடையே நிலவுகின்ற இத்தகைய பயங்கர சூழ்நிலையில், **ஒருவேளை ஏதாவதொரு வினாடியில் ஏதோ ஒரு விஷயத்தில் யாரோ ஒருவர் இன்னொரு வரை கோபமூட்டுவா ரேயானால், ஆத்திர மூட்டுவாரே யானால் எரிச்சல் உண்டாக்குவாரேயானால், இதன் எதிரொலி என்னவாக இருக்கும்?** உலகம் முழுவதும் ஒரு சில விநாடிகளில் எரிந்து சாம்பலாகி விடும் என்பதில் எந்த ஒரு சந்தேக முமில்லை. இதை சுவாசித்துக் கொண்டிருக்கும் பத்திரிகையாளர்கள், இவர்களை அமைதி காக்கும்படி அறிவுறுத்திக் கொண்டேயிருப் பதையும் பார்க்கின்றோம். இதுவரையிலும் விஞ்ஞானம் மூலமாக கண்டுபிடித்த சாதனங்கள் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியின் மூலம் நமக்கு அத்யாவசியமான வசதிகளையும் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். சுகமாக வாழ வேண்டும் எனும் போர்வைக்குள் இருந்து கொண்டு நாமாகவே உருவாக்கிய கொடிய நோய்களுக்கு நோய் தீர்க்கும் மருந்துகளையும் இதர மருத்துவ வசதிகளையும் கூட செய்து கொண்டிருக்கிறோம். இவ்வாறாக பல ஆண்டுகள் உழைத்தும், பல்வேறு முயற்சி களையும் மேற்கொண்டு அடைந்த பலனை, அழித்து விட வேண்டும் என்றும் வல்லரசுகளை

வல்லுனர் பலர் விரும்பி விண்ணப்பித்தும், எச்சரித்துக் கொண்டிருப்பதையும், பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

இங்கே இந்திய நாட்டில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? கல்விகற்பிக்கப்படும் கல்லூரிகளில் பல்கலைக்கழகங்களில் அமைதி நிலவுகிறதா? தொழிற்சாலைகள், உற்பத்திக் கூடங்கள் பலதரப்பட்ட தொழிற்பேட்டைகளில் அமைதி நிலவுகிறதா? பொருளாதார ஏற்றத் தாழ்வு, வறுமையின் கொடுமை, வேலை நிறுத்தம், உரிமை முழக்கங்கள், போராட்டங்கள் என்று அமைதியிழந்த சூழ்நிலையே பரவலாகிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். **நெல்லிக்காய் மூட்டை கட்டவிழ்ந்து சிதறியதைப்போல** பல்வேறு பகுதிகளாகப் பிரிந்து ஜாதி மதக் கலவரம், எல்லைப்பிரச்சனை, தண்ணீர் பிரச்சனை, எனது, உனது என்ற சுய விருப்பங்கள், அதிகார வேட்கை, சுய நலம், எண்ணற்ற பிரச்சனை களாலான வலைக்குள் மக்கள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் பரிதாப நிலை. ஒருமைப்பாடும், நல்லிணக்கமும் தேச நலனும், பின்னுக்குத் தள்ளி சுயநலனுக்கு முதலிடம் கொடுத்து வைத்து விட்டோம். மொத்தத்தில் பாதுகாப்பற்ற நிலை உருவாகி, அதிகரித்துக் கொண்டிருப்பது இன்றைய நிலை என்றால், இனிவரும் காலங் களுக்காக என்ன செய்யப்போகிறோம்?

ஆதலால் நமக்காக நாம் இப்போது செய்ய வேண்டும் என்ற அன்புடன் கூடிய நல்விருப்பம் ஒன்றுண்டு. நாம் நமது சகோதரத்துவம் என்ற உணர்வை எழுச்சியுறச் செய்ய வேண்டும். நமது நற்பண்புகளான பொறுமை, சகிப்புத்தன்மை, பணிவு ஆகியவற்றை நடை முறை வாழ்க்கை யில் கொண்டு வரவேண்டியது இன்றியமையாத கடமை என்றும் ஏற்க வேண்டும். நாம் ஸ்தூல மாக, நம் குடும்ப நிர்வாக வசதிக்காக பலதரப் பட்ட அமைப்புக்களை உருவாக்கி யிருக் கிறோம். உதாரணமாக பொருளாதார கோட் பாடுகள், மதக்கோட்பாடுகள், விஞ்ஞானக் கோட் பாடுகள், தொழில் நுட்பக் கோட்பாடுகள் மேலும் பசுமைப்புரட்சி போன்ற அமைப்புகள் நம்மிடம் உண்டு. ஆனால் இவற்றையெல்லாம் விட நமக்கு அவசியமான கோட்பாடு ஒன்று உண்டு. அதாவது **நமக்குச் சொந்தமாயிருந்தும் நடை முறைப்படுத்தாமலிருக்கின்ற அமைதி காக்கும் கலை. மனிதன் உண்மையான இந்த வாழும் கலையைக் கற்றுக் கொள்ளாத வரையிலும், மனிதன் அமைதி அனுபவத்தோடு கூடிய ஒரு மூச்சைக் கூட அவனால் சுவாசிக்க இயலாது** என்பது தான். இதன் காரணமாக மனிதனுடைய முகத்தில் மகிழ்ச்சிக்குப்பதிலாக கவலையும், ஆவலும், மன இறுக்கத்தின் பிரதி பலிப்புமே காணப்படுகிறது. இன்றைய இத்தகைய உலக சூழ்நிலையில் மறுக்கமுடியாத உண்மை ஒன்று உண்டு. அதாவது, மனிதனுக்கு உலகளாவிய அளவில் நன்மையளிக்கக்கூடிய வித்தியாசமான புரட்சி அவசியமானதாக இருக்கிறது. என்பது தான்.

**நல்லிணக்கமும், நட்பும், சகோதரத்துவ உணர்வும் நிலவக்கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்கும் தொண்டு அவசியமாக இருக்கிறது. இந்த உணர்வை மக்களிடம் உருவாக்குவது என்பது ஒரு சாதாரண விஷயமல்ல. மிகப்பெரிய பொறுப் பாகும். இது அவசியம். ஏனெனில் இது நிலையான சுகம் தரும் திட்டம். ஆதலால் செய்யத் தான் வேண்டும். செய்யமுடியும் என்று இதனை ஒரு சவாலாக ஏற்றுக் கொள்பவர்கள் யாராவது இருப்பார் களேயானால், இது சமுதாயத்திற்குச் செய்யும் மிகப்பெரிய சேவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.**

மக்கள் அனைவரையும் சகோதரத்துவம் என்ற ஓர் உணர்வில் ஒன்று திரட்டுவது என்பது மாபெரும் காரியம். இதற்கு தியாகம், தவம் மற்றும் தன்னலமற்ற தொண்டு மிக அவசியமானதாகும். எனினும் இம்மாபெரும் பொறுப்பை ஏற்போம், வாருங்கள் என்று யாராவது கொடி உயர்த்தியிருக்கிறார்களா? ஆம். இம் மாபெரும் பொறுப்பை ஏற்று நிர்வகிக்க தாய்

மார்கள் பலர் இப்பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயத்தைச் சார்ந்த சகோதரிகள் ஆவர். தூய்மை, நேர்மை என்ற உயரிய பண்புகளை நடைமுறையில் கொண்டு வாழ்ந்து கொண்டிருப் பவர்கள். அன்றாடம் மாணவர் களாகப் படித்துக் கொண்டிருப்பவர்கள். சேவை செய்து கொண்டும் இருக்கிறார்கள். யோகி வாழ்க்கையில் இருக்கும் அதே சமயம் இவர்களில் யாருக்காவது தவிர்க்க முடியாத லௌகீக பொறுப்பு இருக்குமானால் அந்தப் பொறுப்பையும் நிறைவேற்றிக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் இறை நம்பிக்கையுடையவர்கள் மட்டுமல்ல. இம்மா பெரும் நன்மை தரும் காரியத்தை உண்மை யாகவே நடத்திக் கொண்டிருப்பவரும் அவரே தான் என்றும் தாங்கள் அவருடைய கருவி களாகவே இருக்கிறோம் என்பதிலும் அசைக்க முடியாத நம்பிக்கையுடைவர்களாகவும் இருக் கிறார்கள். உலக நாடகத்தில் இது ஒரு சிறப்பு அம்சம் ஆகும்.



## இயற்கையின் சீற்றம்

சமீப காலமாகவே, பஞ்ச தத்துவங்கள் அமைதி இழந்திருக்கின்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருப்பதை அனுபவம் செய்து கொண்டிருக்கிறோம். இதன் காரணமாக நமது வாழ்க்கையில் நாம் அமைதியை இன்னும் அதிகமாக இழந்து காலம் கடத்திக் கொண்டிருக் கிறோம். .

இந்த அனுபவம் சிருஷ்டி சீர் குலைந்து கொண்டிருக்கிறது என்பதன் அறிகுறியாகவே தோன்றுகிறது. ஆகையால் இன்னும் மோசமான விளைவுகளை விரைவிலேயே எதிர்கொள்ள வேண்டியதிருக்குமோ என்ற அச்சம் மனதில் உண்டாகியிருக்கிறது. தினந்தோறும், உலகம் முழுவதிலும் எங்கோ ஓரிடத்தில் வெள்ளம், சூறாவளி, ஆகியன வேறொரிடத்தில் காடுகளில் நெருப்பு பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இன்னொரு இடத்தில் எரிமலை அக்னிக் குழம்பை, சாம்பலோடு வெளியேற்றிக் கொண்டிருக்கிறது. நமது அன்றாட தேவைக்காக தவிர்க்கவும் முடியாமல் பல வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இதன் காரணமாக ஏதோ ஒருவிதத்தில் நாள்தோறும் பற்பல விபத்துக்கள் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. ஜனப் பெருக்கம், போதிய சுகாதாரமின்மை, புதுப்புது நோய்கள், ஏதோ ஒரு விதத்தில் பற்றாக் குறை என்று உத்தரவாதமில்லாத நிலையில் வாழ வேண்டும், வேறு வழியில்லை என்று நம்பிக்கை இழந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இவையெல்லாம், பூமியில் மிகப் பெரிய மாற்றத்தின் அவசியத்தை உறுதி செய்வதாகவே தோன்றுகிறது. ஆகையால் சமீப காலமாகவே தனித்தனியே தனது சீற்றத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்ற இயற்கையானது, ஒரே சமயத்தில் ஒட்டு மொத்தமாக சீற்றத்தை வெளிப்படுத்தினாலும் வியப்பதற்கு ஒன்றுமில்லை. எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் நமக்கு ஒரு வழி உண்டு. அதாவது ஒவ்வொருவரும் தனது மனோ வலிமையை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்பது தான் .................. அதாவது ஆத்மாக்களாகிய நாம் இந்த சரீரத்திலிருக்கும் வரை சக்தி சாலியான நிலையை உருவாக்கிக் ஆக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு இராஜயோகம் ஆதாரமாக இருக்கும். இதன் மூலம் நாம் இனிவரும் எதிர்ப்புகளை சமாளித்து வெற்றி கொள்வது சாத்தியம்.




**சென்னை:** அம்பத்தூரில் கோடை விடுமுறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பள்ளி மாணவ மாணவிகளுடன் பி.கு. உமா மற்றும் பி.கு. சுரேஷ்



**செங்கல்பட்டு:** அச்சரப்பாக்கம் கீதாபாடசாலை துவக்க விழாவில் கொடியேற்றுபவர் பி.கு. இராமகிருஷ்ணன் மற்றும் பி.கு. சகோதர சகோதரிகள்




**பாலக்காடு:** சேகரிபுரம் என்ற இடத்தில் பிரம்மா குமாரிகள் சார்பாக அமைக்கப்பட்ட பேருந்து நிழற்குடை.



**சென்னை:** Air India Limited-ல் பணிபுரிபவர்களுக்கு இராஜயோக தியானம் பற்றி விளக்கும் அளிப்பவர் பி.கு. நீலிமா



**திருவாரூர்:** குடும்ப திருவிழா என்ற நிகழ்ச்சியில் உரை யாற்றுகின்றார் பி.கு. தேவி



**சென்னை:** அண்ணாநகரில் இளைஞர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு நிகழ்ச்சியில் உரையாற்றுகின்றார் பி.கு. இரஞ்சனி



**திருநெல்வேலி:** புகையிலை ஒழிப்பு தினத்தை ஓட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாடக நிகழ்ச்சி



**சென்னை:** வில்லிவாக்கம் ரயில்வே நிலையத்தில் புகையிலை ஒழிப்பு தினத்தில் கண்காட்சியினை திறந்து வைப்பவர்கள்: திரு. ஆனந்த ராதா, பி.கு. ஜான்சிராணி, திருமதி வசந்தா, திரு. இராஜகோபாலன், திரு. வெங்கடேசன், திருமதி சிம்ரன்.

# அகில உலக யோகா தின நிகழ்ச்சிகள்



**நாகர்கோவில்:** அகில உலக யோகா தின துவக்கவிழாவில் குத்துவிளக்கு ஏற்றுபவர்கள்: திருமதி மீனா தேவ், சேர்மன், திரு. குமாராசாமி, திரு. வேலாயுதம், Ex. MLA பி.கு. மாலா, பி.கு. கோகிலா, Mr. Inkarsal, Scientist, ISRO மற்றும் பி.கு. சென்னையன்.



யோகா தின நிகழ்ச்சியில் பங்கு கொண்ட சகோதர சகோதரிகள்.




**சிதம்பரம்:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள்



**உடுமலைபேட்டை:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சகோதர சகோதரிகள்



**திருவண்ணாமலை:** மருத்துவர் தினத்தன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மருத்துவர்களுடன் பி.கு. உமா




**உடுமலைபேட்டை:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் யோக அனுபவம் செய்யபவர்கள் பி.கு. மீனா, பி.கு. ராதிகா மற்றும் பிரம்மா குமார் சகோதர சகோதரிகள்.



**திருநெல்வேலி:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் Mr. Frankpaul Jeyaseelan, District Sports Officer, திரு. ராஜன், Deputy Commissioner of Police, திரு. சிதம்பரம், National Secretary IARF, பி.கு. சீதாதேவி



**காரியாபட்டி:** உலக யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தியான அனுபவம் செய்விக்கின்றார் பி.கு. கஸ்தூரி

# அகில உலக யோகா தின நிகழ்ச்சிகள்



**அடூர்:** அகில உலக யோகா தின நிகழ்ச்சி துவக்கவிழாவில் திரு. உம்மன் தாமஸ், சேர்மன், திரு. தங்கப்பன் பிள்ளை, தலைவர், (இன்டிலியப்பன் திருகோவில்) பி.கு. உஷா



**கடலூர்:** அகில உலக யோகா தின துவக்கவிழாவில் பிரமுகர்களுடன் சகோதரர் பி.கு. பூபதி ராஜா



**மதுரை:** அகில உலக யோகா தின பேரணியில் கலந்து கொண்ட பிரம்மா குமார் சகோதர சகோதரிகள்



**மேட்டூர்:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள்



**நெய்வேலி:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் உரையாற்றுபவர் பி.கு. தனலட்சுமி மேடையில் திரு. இராமலிங்கம், GM, NLC, Dr. நாகராஜன், MD, DIP Yoga.



**திருவள்ளூர்:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் திரு. K. வீரராகவ ராவ், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு இறை நினைவு பரிசினை வழங்குபவர் பி.கு. ஜெயலட்சுமி



**அருப்புக்கோட்டை:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொணடவர்கள்.



**புதுக்கோட்டை:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஜெ.ஜெ. ஆர்ட்ஸ் கல்லூரி மாணவர்கள்

# உலக புகையிலை ஒழிப்பு தின நிகழ்ச்சிகள்



**கடலூர்:** புகையிலை ஒழிப்பு கண்காட்சி ஊர்தியினை ஆரம்பித்து வைப்பவர்கள்: Dr. Sara I faul, Addl. Joint Director மற்றும் பி.கு. மோகன் குமார்



**நாகர்கோவில்:** புகையிலை ஒழிப்பு கண்காட்சி ஊர்தியினை கொடியசைத்து துவக்குபவர்கள்: திரு. K.T. பச்சமால், MLA மற்றும் பி.கு. மாலா, பி.கு. கோகிலா



**ஈரோடு:** புகையிலை ஒழிப்பு கண்காட்சி முன்னிட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரசுரம் வழங்கப்பட்டது.



**ஈரோடு:** புகையிலை ஒழிப்பு கண்காட்சியினை திறந்து வைப்பவர்கள் டி.எஸ்.பி. மற்றும் நகர பிரமுகர்கள் உடன் பி.கு. ரவி



**ஸ்ரீபெரும்புதூர்:** புகையிலை ஒழிப்பு கண்காட்சி ஊர்தியினை கொடியசைத்து துவக்குபவர்கள்: காவல்துறை அதிகாரி திரு. பாலு, பி.கு. ருக்மணி, பி.கு. ஈஸ்வரன், பி.கு. இராஜேஷ், (மதுபன்) பி.கு. முத்து



**சென்னை:** பூந்தமல்லியில் புகையிலை ஒழிப்பு கண்காட்சி ஊர்தியினை கொடியசைத்து துவக்குபவர்கள்: Dr. திரு. அருண் ரமணா, Dr. உமாராணி, திரு. அட்கோ மணி மற்றும் பி.கு. பத்மா.



**மதுரை:** விக்டோரியா எட்வார்ட் ஹாலில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த புகையிலை ஒழிப்பு கண்காட்சியினை திறந்து வைப்பவர்கள் திரு. அவினாஷ், சரவண ராபின்சன் மற்றும் பி.கு. அமிர்தா, பி.கு. செந்தாமரை, பி.கு. சாந்தி



**திருவள்ளூர்:** புகையிலை ஒழிப்பு தின பேரணியில் கலந்து கொண்டவர்கள்: பி.கு. ஜெயலட்சுமி, சேர்மன் திரு. A. பாஸ்கரன், திரு. K. வீரராகவ ராவ், மாவட்ட ஆட்சியர், திரு. E.T. சாம்சன், SP, மற்றும் பள்ளி மாணவர்கள்.



# பந்தனத்திலிருந்து விடுபடுவதற்கான விதி

பிரம்மா குமார் பகவான் பாய்,
சாந்திவன், தல்லட்டி

ஒரு குரு தன்னுடைய சிஷ்யனுக்கு ஒரு மந்திரம் தந்தார். பகவானுடன் இருந்தால் பந்தனம் விடுபடும். இந்த மந்திரத்தை எப்போதும் உச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று சொன்னார். இந்த மந்திரம் உச்சரிப்பதன் மூலம் தன்னுடைய பந்தனம் குறைந்து கொண்டே இருக்கும், மேலும் பிறரும் பந்தனத்திலிருந்து விடுபட நிமித்தமாக ஆவோம். குருவின் கட்டளைக்கு இணங்க சிஷ்யன் தினமும் இந்த மந்திரத்தை உச்சரித்து வந்தான்.

அவ்வாறாக சிஷ்யன் அருகாமையிலுள்ள கிராமத்திற்கு தினமும் பிச்சை எடுக்கச் செல்வான். ஒரு நாள் அவன் தன்னுடைய மந்திரம் உச்சரித்துக் கொண்டே ஒரு தெருவில் செல்வந்தர் மாளிகைப் பக்கம் வந்து சேர்ந்தான். அவனுடைய அந்த மந்திரத்தை கூண்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த கிளி கேட்டது. கிளயானது அந்த சிஷ்யனை அழைத்தது. மேலும் இந்த மந்திரத்தால் என்னுடைய பந்தனம் அறுந்து விடுமா என்று கேட்டது. பந்தனத்தை முடிப்பதற்கான விதியை தயவு செய்து கூறுங்கள் என்றது. சிஷ்யன் சொன்னான். இந்த மந்திரம் எனக்கு குரு தந்தார். மேலும் இதை தினமும் உச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். நாளை நான் குருவிடம் பந்தனத்திலிருந்து விடுபட விதி என்ன என்பதைக் கேட்டு வருவதாகச் சொனனான்.

சிஷ்யன் தன்னுடைய குருவிடம், கிளியினுடைய விஷயம் சொல்லிக் கொண்டிருந்த போது குரு திடீரென தியானத்தில் ஆழ்ந்தார். முழு இரவும் குரு தியானத்தில் இருந்தார். அதன் காரணமாக கிளியினுடைய விஷயத் திற்கான விடை கிடைக்கவில்லை. தினசரி நியமப்படி சிஷ்யனும் பிச்சை எடுக்க சென்று விட்டான். ஆனால் அவன் கிளி யினுடைய கேள்விக்கு விடையில்லையே என யோசித்தான். ஆகையால் இன்று வேறு தெருவிற்கு போகலாம் என எண்ணினான். கிளியோ அதனுடைய கேள்விக்கு பதில் கிடைக்கும் என எதிர் பார்ப்புடன் இருந்தது. இதற்கிடையில் சிஷ்யன் வேறு தெருவிற்கு செல்வதைப் பார்த்த கிளி சிஷ்யனை அழைத்தது. பந்தனத்திலிருந்து விடுபடுவதற்கான விதியை குரு சொன்னாரா என கேட்டது. சிஷ்யன் சொன்னான் நான் குரு விடம் தங்களுடைய பந்தன் முக்த் விஷயத்தை சொல்லும் போது அவர் தியானத்தில் ஆழ்ந்து விட்டார். நேற்று இரவு முதல் இதுவரை தியானத்திலேயே ஆழ்ந்து சிலைக்கு சமமான நிலையில் உள்ளார் என்றான். சிஷ்யனுடைய இந்த விஷயத்தைக் கேட்ட கிளி சொன்னது எனக்கு இப்போது ரகசியம் புரிந்து விட்டது. பந்தனத்திலிருந்து விடுபடுவதற்கான விதி கிடைத்து விட்டது தாங்கள் அந்த மரத்தின் அருகில் சென்று தூரத்திலிருந்தே பாருங்கள் நான் எவ்வாறு பந்தனத்திலிருந்து விடுபடு கிறேன் என்பதை என்றது. சிஷ்யனுக்கு ஒன்றும் புரியவில்லை.

இப்போது கிளியும் அந்த குருவைப்போல் தியானத்தில் ஆழ்ந்தது. அதாவது பிணம் போல காட்சி அளித்தது. சிறிது நேரத்தில் செல்வந்தர்

கூண்டிற்கு அருகில் வந்து வழக்கம் போல் தோத்தாராம் (கிளியே) வணக்கம் என இரண்டு மூன்று முறை சொன்னார். ஆனால் கிளி அதற்கு கொஞ்சம் கூட பதில் தரவில்லை. சிறிது நேரம் கழித்து அவர் கிளிக்கு வழக்கம்போல் பழம் தர முயற்சி செய்தார். ஆனால் கிளி அதை பார்க்கக்கூட இல்லை. அதன் பின்னர் செல்வந்தரின் குழந்தை வழக்கம் போல் கிளியுடன் விளையாட முயற்சி செய்தான். ஆனால் கிளியோ இறந்தது போல காட்சி அளித்தது. அனைவருமே கிளிக்கு ஏதோ ஆகிவிட்டது என எண்ணினார்கள். வேலைக்காரனிடம் இது இறந்து விட்டதென எண்ணி கிளியை வெளியே தூக்கி எறியச் சொன்னார். கூண்டிலிருந்து வெளியே எடுத்த அந்த நேரத்தில் பந்தனத்திலிருந்து விடுபட்டு ஆகாயத்தில் ஆனந்தமாக பறந்து சென்றது.

இதைப்போன்று நிகழ்காலத்திலும் கூட ஒவ்வொரு மனிதரும் தேகம், தேக சம்பந்தம், பண்டம், பொருட்கள், சொத்து ஆகிய பந்தனங்களில் (கூட்டில்) மாட்டிக் கொள்கின்றனர். அந்தக் கிளியானது ஒரு கூண்டில் இருந்தது. ஆனால் மனிதனோ இது அது என அனைத்துக் கூண்டிலும் மாட்டிக் கொண்டே செல்கிறான். அவன் பந்தனத்திலிருந்து விடுபட முயற்சி செய்கிறான். ஆனால் ஒரு பந்தனத்திலிருந்து விடுபடுவதற்கு முன்பே வேறொரு பந்தனத்தில் மாட்டிக் கொள்கிறான். இவ்வாறாக இந்த பந்தனங்களின் காரணமாக இன்று மனிதன், துக்கம், அசாந்தி, கவலை, படபடப்பு ஆகியவற்றுடன் சோர்ந்து காணப்படுகின்றான்.

ஆகையால் இப்போது பரமசத்குரு சிவபரமாத்மா நம்மை இந்த அனைத்து பந்தனத்திலிருந்தும் விடுவிப்பதற்காக இந்த பூமிக்கு வந்துள்ளார். மனதில் **கூடவே இரு** என்னும் மந்திரமும் மேலும் அசரீரி ஆவதற்கான விதியையும் கூறியிருக்கின்றார் எப்போது மனதினால் **கூடவே இரு** என்னும் மந்திரத்தினால் அசரீரி ஆவதற்கு உள்முக தியானத்தில் மூழ்கி இருக்கின்றோமோ அப்போது அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபடு வோம். எப்போது தேக அபிமானத்தில் வருகின்றோமோ, வெளி நோக்கு பார்வையில் வருகின்றோமோ அப்போது அநேக மனிதர்கள், பொருள், செல்வம், மோகவசம், சுயநலம் என்று துன்பத்தின் பக்கம் சென்று கொண்டே இருப்போம். அதன் மூலம் அநேக பந்தனங்களில் மாட்டிக் கொண்டே தான் இருக்க வேண்டும். மேலும் வாழ்க்கையில் விலை மதிக்க முடியாத நேரமும் கூட வீணானவற்றில், கவலையில், துக்கத்தில் அவ்வாறே கழிந்து விடுகிறது. ஆதலால் வாழ்க்கையில் உண்மையான ஆனந்தம் அடைய முடிவதில்லை. பந்தனத்திலிருந்து விடுபட்ட வாழ்க்கையில் உண்மையான சுகம் மற்றும் உண்மையான சேவை அடங்கி உள்ளது. சுதந்திரமாக மக்களுக்கு சேவை செய்வது என்றால் ஏறக்குறைய எல்லையற்ற சேவை செய்ய முடியும். இதைப்போன்ற பந்தனத்திலிருந்து விடுபட்ட சேவைகளில் தான் எல்லோரையும் திருப்திபடுத்த முடியும்.

இந்த விதமாக நாம் ஒவ்வொரு விதமான பந்தனத்தையும் விலக்குவதற்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும் எல்லாவற்றிலிருந்தும் விலகி இருக்க வேண்டும். எந்த விதமான பந்தனம் அனுபவம் ஆனாலும் நாம் அச்சமயத்தில் மனதால் **கூடவே இரு** என்னும் மந்திரத்தில் மூழ்கி அசரீரி ஆகவேண்டும். பிறகு அந்த பந்தனங்களிலிருந்து தம்மை தாமே விடுபட்டதாக அனுபவம் செய்வோம். எப்போது நாம் அசரீரி ஆகின்றோமோ பிறகு நம்மை அந்த பந்தனமே, வாழ்ந்தாலும் விலகியிருப்பதைக் கண்டு பின்னே சென்று விடும். எப்போது நாம் அசரீரி ஆகின்றோமோ அப்போது பார்த்தாலும் - பார்க்கமலிருக்க, கேட்டாலும், கேட்காமலிருக்க முடியும். அதாவது கர்மாதீத் நிலை ஏற்படும். அதைத்தான் பந்தனத்திலிருந்து விடுபட்ட நிலை என்று கூற முடியும். பிரம்மா பாபாவும் இந்த

விதி மூலம் தான் பந்தனத்திலிருந்து விடுபட்டு, கர்மாதீத் ஆனார். இப்போது நாம் பிரம்மா பாபாவை பின்பற்ற வேண்டும். ஆகையால் பாபா முரளியிலும் கூட அசரீரி ஆவதற்கான தவ முயற்சியை அடிக்கடி நினைவு படுத்துகின்றார். அசரீரி ஆகும் விதியின் மூலமாகத்தான் நாம் ஈஸ்வரிய சந்திப்பின் அனுபவத்தை ஒவ்வொரு வினாடியும் செய்து கொண்டிருக்க முடியும் அதிலிருந்து நாம் எளிதாக பந்தனத்திலிருந்து விடுபடலாம்.

ஆகையால் இப்போது பரம் சத்குருவின் மனதால் **கூடவே இரு** என்னும் மந்திரம் மூலமும் அசரீரி ஆவதற்கான விதி மூலமாகவும் பந்தனத்திலிருந்து விடுபடவும், கர்மாதீத் ஆவதற்கும் தவ முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறாக தவ முயற்சியில் நாம் நினைவில் மூழ்கியிருப்பதைப் பார்த்து தேக சம்பந்தப்பட்ட பொருட்கள் அனைத்தும் நம்மை பின்னால் விட்டுச் சென்று விடுபட்டு பறக்கும் பறவை, பரிஸ்தா (சூட்சும தேவதை) ஆகி எல்லையற்ற சேவை செய்ய முடியும்.

## உள்நோக்கு முகமாக இருப்பது

மன அமைதி குறையாமலிருக்க தன்னைத்தான் மட்டுமே குறிப்பாக கவனம் கொள்வது அதல்லாமல் மற்றவர்களும் நம்முடன் சேர்ந்து இருப்பதையும் உணர்ந்து சமநிலையில் இருக்க வேண்டும். தன் மனதில் எண்ணங்களின் ஓட்டம், உணர்வுகள், வெளி உலக நடவடிக்கைகள், திட்டங்கள், தான் இது வரை அடைந்துள்ள பயன்கள் முன்னேற்றம் முதலான அனைத்திலும் தேவைக்கேற்ப சிந்தனை செலுத்த வேண்டும்.

இம்முறையை கடைப்பிடிப்பதால் காலம் மற்றும் சக்தி விரைய மாகாமல் இலட்சியம், குறிக்கோள் மட்டுமே மனதின் எதிரில் நிற்கும். எதிர்பாராமல் ஏதாவது தொந்தரவு ஏற்பட்டாலும் மனதில் ஏற்காமல் ஏதோ நன்மை ஏற்படப்போகிறது என எண்ணவும்.

உதாரணமாக முக்கியமான செய்தி ஒன்று செய்தி தாளில் படிக்கும்போதோ, முரளி படிக்கும் போதோ அல்லது வகுப்பில் இருக்கும் போது வெளி உலக கவனத்திலிருந்து விலகி இருக்க முயற்சி மேற்கொள்ளவும்.

ஏதொன்றிலும் ஈடுபாடில்லாமல் (சேவையில், பாபா நினைவில்) வீண் பொழுது போக்கில் ஓய்வாகவும் இருப்பதால் தேவையற்ற வீணான விஷயங்களால் வெகு சுலபமாக கவரப்பட்டு விடக்கூடும்.

தவறு செய்வதினாலும், பலவீனத்தாலும் மற்றவர் செயல்களினால் மன அமைதியை இழப்பதற்குப் பதிலாக தன்னை ஆத்மா என உணர்ந்து, பரமாத்மாவுடன் நினைவினால் இணைத்து எதிர்காலத்தில் பெறப்போகும் அளப்பரிய பலனை நோக்கி தீவிர கதியில் வீறு நடை போடுவோமாக!

**பிறர் என்னைப் புகழ்வதை விரும்புவேனாகில்,**
**இகழப்படும்போது எளிதில் துன்புற்றுவிடுவேன்.**



# தூய்மை வழி வந்த செல்வம் மற்றும் அதன் பயனுள்ள உபயோகம்

இராஜயோகி பி.கு. இரமேஷ்ஜி, மதுபன்,
தமிழாக்கம்: பி.கு. சுந்தர்ராஜன், சென்னை

செல்வம் பல வழிகளில் பயன்படுத்தப் படுகிறது. சுயமாகவும் பயன்படுத்தலாம் மற்றவர் கள் மூலமாகவும் பயன்படுத்தலாம். ஆனால் மற்றொருவர் மூலம் பயன்படுத்தும் போது அவர் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்து அதாவது தீய செயலுக்காக உபயோகப்படுத்தப்படுமானால் அதன் பாதிப்பு, விளைவு நமக்கும் ஏற்படும். தவறான காரியங்களில் ஈடுபடுத்தப்படும் செல்வம் தனிப்பட்ட முறையில் அல்லது தன் குடும்பம் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது. செல்வம் புண்ணிய காரியங்களுக்கும் பயன்படலாம், பாவகாரியங் களும் நடைபெறலாம். பணத்தின் மூலம் கொடுக்கல் வாங்கல் (கடன்) கூட நடக்கிறது. தூய்மையான செல்வம் அதாவது நேர்மையான வழியில் சம்பாதித்த செல்வம் பிறர் வாழ்க்கையில் தூய்மை மற்றும் ஈஸ்வரிய பாக்கியம் பெறவும் தூண்டுகோலாக அமையக்கூடும்.

செல்வத்தை புண்ணிய காரியங்களுக்குக் கொடுப்பவருடைய பொருளாதார நிலை கூட மிக பெருமைப்படக்கூடிய விசயமாகிறது. ஏழை யின் வருமானத்தால் வாங்கும் ஒரு செங்கல் செல்வந்தர் கொடுக்கும் செல்வத்தால் வாங்கப் படும் பொருட்களை விட பல மடங்கு சிறப்பானது, மதிப்புள்ளது. நம் யக்ஞத்தின் முதல் தலைமை நிர்வாகியாயிருந்த ஜெகதாம்பா சரஸ்வதி யினுடைய வாழ்க்கை மிகச்சிறந்த தொரு எடுத்துக்காட்டு. யக்ஞத்தின் ஆரம்ப காலத்தில் சமர்ப்பணம் ஆகியிருந்த சில சகோதர சகோதரிகள் லௌகீக வாழ்க்கையில் மிகுந்த செல்வந்தர்களாக இருந்தனர். ஆனால் ஜெகதம்பா அவர்களோ அந்தளவு செல்வந்தராக இல்லை. இருந்தாலும் கூட தன் சுய முயற்சியின் காரணத் தால் யக்ஞத்தை நடத்தக்கூடிய முக்கியமான பொறுப்பை வகித்தார்.

நாம் எதிர் கொள்ளப்போகும் இறுதி சோதனையில் மோகம் சம்மந்தப்பட்டதாக இருக்கும். அதாவது பற்றிலிருந்து விடுபட்ட நினைவு சொரூப நிலை தான் அந்த இறுதியான சோதனை. இதன் சம்மந்தமாக ஒரு உண்மை சம்பவத்தை குறிப்பிட வேண்டியுள்ளது. மும்பையில் ஒரு வயதான பெண்மணி ஞானத்தில் இருந்தார். சிறு வயதிலேயே விதவையானவர். அவருக்கு குருமுகி என்ற ஒரு மொழி கொஞ்சம் தெரிந்திருந்தது. முதுமை காரணத்தால் அவரால் உடல் சம்மந்தப்பட்ட சேவையில் ஈடுபட முடியவில்லை. ஆனால் ஈஸ்வரிய யக்ஞ தொடர்பில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். வயது முதிர்ச்சியால் மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டு 5-6 நாட்கள் சுய நினை வின்றி இருந்தார். ஆத்மா ஒரு நாள் சரீரத்திலிருந்து விடுபட்டு விட்டது. அவர் நினைவாக அவருடைய உறவினர்கள் போக் படைத்தனர். சில சகோதரிகளின் சரீரத்தின் மூலம் இறந்து போன ஒருவருடைய ஆத்மாவின் லௌகீக மற்றும் அலௌகீக தொடர்புள்ளவர்களோடு சந்திப்பதற்காக தியானத்தில் செல்வதுண்டு. குறிப்பிட்ட இறந்தவரின் ஆத்மா அந்த சந்தேஷியின் சரீரத்தில் வந்தபோது உரை யாடினார். அப்போது அந்த ஆத்மா, தான் ஒரு பெரிய அரச குடும்பத்தில் பிறவி எடுக்கப் போவதாக கூறியதாம். அதற்கான காரணம் அந்த இறந்து போன ஆத்மா

தன்னிடமிருந்த சொற்ப செல்வம் முழுவதையும் ஈஸ்வரிய சேவையில் ஈடுபடுத்தியிருந்தார். அதன் பிரதி பலனாக நஷ்டமோகா அதாவது பற்றற்ற நிலை என்ற சோதனையில் தேர்ச்சி பெற்றிருந்தார். ஆகவேதான் பாபா அவருக்கு உயர்ந்த ஒரு அரச குடும்பத்தில் பிறக்கக் கூடிய பாக்கியத்தை அளித்தார்.

அந்த பெண்மணி இறந்த 5-6 மாதங்களுக்குப் பிறகு ஒரு கோடீஸ்வரர் இறந்து விட்டார். அவருடைய ஆத்மாவும் தியானத்தில் சென்ற சகோதரி மூலம் வந்து உரையாடிய போது அந்த ஆத்மாவிடம் உங்களுடைய மறுபிறவி ஒரு புகழ் பெற்ற அரச குடும்பத்தில் ஏற்படுமே என சாதாரணமாக கூறியபோது அந்த ஆத்மாவோ தானும் அவ்வாறு தான் எண்ணிக் கொண்டிருந்தேன், ஆனால் சிவபாபா எனது மறுபிறவி ஒரு சாதாரண குடும்பத்தில் தான் ஏற்படும் என்று கூறிவிட்டார் என்றதாம். மீண்டும் இனிமையான பாபாவிடம் தான் கோடீஸ்வர குடும்பத்தைச் சேர்ந்தவன் எனவே குறைந்தது ஒரு செல்வந்தர் குடும்பத்திலாவது பிறக்க வேண்டுமென்ற தன் விருப்பத்தை ஆத்மா தெரிவித்தது. அப்போது பாபா கூறினார் பணம் எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கலாம். அதனால் மட்டுமே பலன் கிடைக் காது. தங்களிடமிருந்த செல்வத்தை யக்ஞ சேவை யில் மிகக் குறைந்த அளவே பயனுள்ளதாக் கினீர்கள். ஆகவே சாதாரண குடும்பத்தில் தான் பிறவி கிடைக்கும் என்று. ஆத்மாவோ பாபா ! நான் கீழே பூமிக்குச் சென்று என் குழந்தை களைச் சந்தித்து என் பெயரிலுள்ள செல்வத்தை புண்ணிய காரியங்களில் அதாவது ஈஸ்வரிய காரியங்களில் ஈடுபடுத்தும்படி அறிவுறுத்து கிறேன் என்று கூறியபோது பாபா கூறினாராம்- சரீரம் விடும் வரையிலும் செல்வத்தை பயன்படுத்தும் வழி முறைப்பற்றி எழுதி (வில்) வைக்கவில்லை அல்லது வாய் மொழி மூலமாகவும், உங்கள் வாரிசுகளிடம் சொல்ல வில்லை. ஆனால் நீங்கள் இறுதிகாலம் வரை செய்த கர்மங்களின் ஆதாரப்படி உங்கள் பிறவி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு விட்டது. சரீரம் விட்ட பிறகு அதிகாரம் பிள்ளைகள் வசம் உள்ளது எனவே அவர்கள் நற்காரியங்கள் செய்தால் அதன் பாக்கியம் அவர்களைச் சேரும் ஆகவே தற்சமயம் சாதாரண குடும்பத்தில் தான் பிறவி எடுப்பீர். ஒருவேளை நீங்கள் சேமித்து வைத்த செல்வம், புண்ணிய காரியத்தில் ஈடுபடுத்தப்படுமானால் இதன் பிரதிபலனாக, புதிய பிறவியின் இடைப்பட்ட காலத்தில் எதிர்பாராமல் பலன் ஏற்பட வாய்ப்புண்டு என்று பாபா கூறினாராம்.

மற்றொரு சம்பவத்தில் ஈஸ்வரிய குடும்ப சம்மந்தப்பட்ட ஒரு ஆத்மாவின் உறவினர் யாரும் ஞானத்தில் இல்லை, தொடர்பிலும் இல்லை. எனவே சரீரம் விட்டு சென்ற ஆத்மா வின் நினைவில் போக் படைக்கப்பட்டது . வதனத்தில் அன்பு பாபாவிடம் அந்த ஆத்மா வின் உரையாடலை தியானத்தில் சென்று வந்த சகோதரி கூறினார் : பாபா ! என்னிடமிருந்த செல்வத்தை நல்ல காரியத்தில் ஈடுபடுத்த விரும்பினேன், ஆனால் எதிர்பாராத விதமாக ஒரு விபத்தில் மரண மடைந்து விட்டேன். எண்ணம் மனதிற்குள்ளாகவே இருந்து விட்டது, என் சம்மந்தப்பட்டவர்கள் யாருமே ஞானத்தில் இல்லை, என் மனைவி எனக்கு முன்பே இறந்து விட்டார், லௌகீக சந்ததி யாரும் இல்லை. ஆகவே தாங்கள் அனுமதித்தால் இந்த சந்தேஷி சகோதரி சரீரத்தின் மூலம் கீழே சென்று ரமேஷ் சகோதரர் உதவியுடன் எனது சொத்தை யக்ஞத்திற்கு அர்ப்பணம் செய்து பத்திரங்களில் கையொப்பமிட்டு விட்டு வருவேன் என்று ஆத்மா கூறியபோது நடைமுறை மற்றும் ஈஸ்வரிய நியமத்தின்படி இந்த விசயம் ஏற்கப்பட மாட்டாது. வாழ்நாளில் உங்களுடைய செல்வத்தை பயனுடையதாக்கவில்லை, பூமியில் உள்ள ஆஸ்தியின் ஆதாரத்தில் உங்கள் எதிர் காலத்தை நிர்ணயிக்க முடியாது. உங்கள் மூலம் இது அனைவருக்கும் ஒரு படிப்பினை. செல்வத்தை வாழ்ந்து கொண்டிருக்கும் போதே

பயனுடையதாக்க வேண்டும் அல்லது விருப்பத் திற்கேற்ப எழுத்து வடிவில் (வில்) முறைப் படுத்தினால் எதிர்கால பிறவி நல்லதாக அமையக் கூடும். இதை கவனத்தில் வைத்து செல்வத்தை பயனுடையதாக்க வேண்டும். எண்ணிக் கொண்டே காலவிரையம் செய்பவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கை செய்யக் கூடிய பாடம், இவ்வாறு பாபா பதிலுரைத்தார்.

### செல்வத்தை பயன்படுத்துவோரின் தரவரிசை

அர்த்த சாஸ்திரத்தில் செல்வத்திற்கு அது ஒரு பாதை (வழி) என விளக்கம் கூறப் பட்டுள்ளது. பாதை மூலம் ஒரு நபரோ அல்லது வாகனமோ ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல முடியும். பாதைகளிலும் சந்திப்புகள் (இணைப்பு) வருகின்றன. அது போலவே விற்பவர், வாங்குபவர் (நுகர்வோர்) இருவருக்குமான தொடர்பு செல்வத்தின் (பணம்) மூலம் ஏற்படுகிறது. இதன் விலை நிர்ணயிக் கப்பட்டு வியாபாரம் நடக்கிறது. செல்வம் தானாகவே நன்மை அல்லது தீமையை விளைவிப்பதில்லை. பயன்படுத்துவோரை பொறுத்தது.

உலகில் செல்வத்தை பயன்படுத்துவோர் நான்கு வகையினராக உள்ளனர். முறையே - 1 கருமி 2. வீண் செல்வு செய்பவர் 3. செல வழிக்கும் முன் சிந்தனை செய்பவர் 4. தானம் செய்பவர் அல்லது நற்காரியங்களில் பயன்படுத்துபவர்.

**கருமி:** பலரிடம் நிறைய காசு, பணம் (செல்வம்) இருந்தாலும் செலவு செய்ய தயக்கம். தானும் அனுபவிக்காமல் புண்ணிய காரியங்களில் ஈடுபடுத்தாமல், உடல் நலம் பேணாமல், தன் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காமல் அதாவது பயனுள்ளதாக்கிக் கொள்ளாமல் வாரிசுகளுக்காக மேலும் சேர்த்து வைப்பார்கள்,

### ஊதாரித்தனமாக செலவழிப்பார்கள் :

இனிமையான பிரம்மா பாபா பல முறை எச்சரிக்கிறார், அவசியமானவைக்கு மட்டுமே செலவு செய்யவும், சிக்கனம் தேவை என்கிறார். ஒரு சிலர் பாபாவின் அறிவுரையை ஏற்று நடக் கின்றனர். சிலர் நாகரிகத்தின் மோகத்தால் தேவையற்ற வகையில் வீண் செலவு செய்கின்றனர். ஒரு நாள் இது பற்றிய மேலும் விளக்கத்தை ரமேஷ் சகோதரர் பாபாவிடம் கேட்டுள்ளார். அப்போது (பிரம்மா) பாபா இவர் அணிந்திருந்த கை கடிகாரத்தின் விலையைக் கேட்டாராம். சகோதரர் ரூ.500 என்ற போது பாபா ரூ.100 க்குக் கூட கிடைக்கும் போது ஏன் அதிக விலைக்கு வாங்க வேண்டும் என கூறினாராம். ரமேஷ் சகோதரர் குறைந்த விலை வாட்ச் நன்றாக இல்லை என்று சொல்லியிருக்கிறார். பாபா சகோதரருக்கு 100 ரூபாய் பெருமான கடிகாரம் அணிவித்துள்ளார். 10 வருடங்கள் வரையிலும் கூட அந்த வாட்ச் நன்றாகவே வேலை செய்ததாம்.

பிரம்மா பாபா மும்பையில் இருந்த சமயம், மதுபனிலிருந்து தொழிலாளிகளுக்குத் தருவதற் காக குடை வேண்டுமென செய்தி வந்தது. மறுநாள் வகுப்பில் ஒவ்வொருவரும் ஒரு குடை வாங்கி வரக்கூறினார். மறு நாள் யாரெல்லாம் வாங்கி வந்துள்ளனர் என்று கேட்டார். வகுப்பிற்கு ஒரு சிலர் மட்டுமே வாங்கி வந்துள்ளனர். அவற்றில் சில அதிக விலை யுள்ளவை. பாபா, ஏன் விலை அதிகமாக கொடுத்து வாங்கினீர்கள் என்று கேட்டார். பாபா !நீங்கள் கேட்டதால் அழகாகவும், மடிக்கக் கூடியதாக உள்ள குடை வாங்கினோம் என்று குழந்தைகள் சொன்னார்கள். மற்றொருவர் சுமாரான விலையில் வாங்கியுள்ளார். பார்க்க நன்றாக இருந்ததால் வாங்கினாராம். ஆனால் மது என்ற சகோதரர் வாங்கி வந்ததோ 10-12 ரூபாய் மதிப்புள்ளது. இவ்வளவு சாதாரண மானதை ஏன் கொண்டு வந்தீர்கள் என்று பாபா கேட்டதற்கு அவரது பதில் - தடிமனாகவும், தரமாகவும் பெரியதாகவும் உள்ளது. தொழிலாளர் களுக்கு அடிக்கடி புதியதாக வாங்க வேண்டிய, அவசியமிருக்காது.

இந்தக் குடையின் மரக் கைப்பிடி வலுவானது. மடிக்கக் கூடிய சிறிய குடை சீக்கிரம் கெட்டுப்போகும், அதிக நாள் உழைக்காது. தொழிலாளிகள் சாமான்கள் தூக்க வேண்டியிருக்கும். சாமான்களையும் தூக்கு பவரையும் மறைக்கும். பராமரிப்பும் எளிது என்றாராம்.

இதைக் கேட்டபின் அச்சகோதரருக்கு பாபா முதல் மதிப்பெண் கொடுத்து மதுபன்னுக்கு தேவைப்படும் பொருட்களை மும்பையிலிருந்து மது சகோதரர் மூலமாக வாங்க ஏற்பாடு செய்தார்.

இதன் கருத்து - தகுதியான பொருள், சரியான நேரத்தில், உரிய விலை கொடுத்து வாங்குவது என்பது ஒரு கலை, ஆகவே தான் குறைந்த செலவில் காரியம் சிறப்பாக இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

*செலவு செய்ய தயங்குபவர் :*

உலகில் சிலரிடம் நிறைய பணம் இருந்தாலும் பயன்படுத்த பயப்படுகின்றனர். செலவழித்துவிட்டால் ஏழையாகி விடுவோமோ என்ற வீண் சிந்தனை. பணத்தை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது சரிதான், அதற்காக சரீர ஆரோக்கியம், வேறு சில அவசியமான செலவினங்களுக்குக் கூட பயன்படுத்த தயக்கம். உதாரணமாக ஒரு சேட்டின் கதை :சேட் தன் கணக்கு பிள்ளையிடம் தன்னிடம் எவ்வளவு செல்வம் இருக்கிறது என வினவினாராம். எண்ணிப் பார்த்து சொல்வதற்கு 6 மாதம் தேவைப்படும் இருந்தாலும் தோராயமாக 11 தலை முறைக்கு தாராளமாக செலவழிக்கலாம் என்றார். சேட்டோ அய்யகோ என்னுடைய 12-வது தலை முறையினர் என்ன செய்வார்கள் என்று சிந்தனையில் மூழ்கி விட்டார்.

சேட் போல சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். செல்வத்தை தகுதியான காரியங்களில் ஈடுபடுத்தி பயனுடையதாக்கிக் கொள்வதில்லை. தற்காலத்தில் விலைவாசி பல மடங்கு உயர்ந்து விட்டது, பணத்தின் மதிப்பும் குறைந்து விட்டது. ஆக எந்தளவு ஈஸ்வரிய சேவையில் செல்வம் பயன்படுத்தப்படுகிறதோ அந்தளவு பாக்கியம் கிடைக்கும். கால தாமதம் அதற்கேற்ற பலனே கிடைக்கும்.

**தானம் செய்பவர்:** சமயத்திற்கேற்ப, சூழ்நிலைக் கேற்ப தானம் செய்வது என்பது ஒரு நல்ல பழக்கம் தெய்வீக குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருடைய பேத்திக்கு தானம் செய்வது இயல்பாகவே பழக்கமாக இருந்ததாம். தன் தாயுடன் கோவில்களுக்குச் சென்றால், அம்மாவிடமிருந்து காசு வாங்கி உண்டியலில் இடுவாராம். ஏழைகளைப் பார்த்தால் அதே போல அம்மாவிடமிருந்து காசு பெற்று தானம் கொடுப்பாராம். அதாவது செல்வத்தை உரிய முறையில் பயனுள்ளதாக்கிக் கொண்டால் அதற்கேற்றபடி பிரதிபலனாக எதிர்காலம் அமையும்.

## மனதிற்கு புதிய வழியைக் காண்பிக்கவும்

மனதை உறுதியாக அலைபாயாமல் தடை செய்வதினால் மட்டுமே மகிழ்ச்சி நீண்ட காலத்திற்கு இருப்பதில்லை. மனதை சதா ஸ்திர நிலையில் இருத்த வேண்டும். இதற்கு முதன் முதலில் மனம் ஏற்கின்ற எண்ணங்களினால் ஏற்படும் மகிழ்ச்சியை அனுபவித்து புத்தியை நமது இலட்சியத்தில் நிலை பெறச் செய்ய வேண்டும்.

மனதில் ஈஸ்வரிய போதையின் சங்கல்பத்தை வைப்பதினால் பயனற்றவைகள் நுழையக்கூடிய வழி மூடிவிடும். மனதை வீணானவைகளின் பக்கம் போக விடமாட்டேன் என்பதே முக்கிய முயற்சியாக இருக்கட்டும். வீணானவைகளை காண்பது, கேட்பது மற்றும் பேசுவதிலிருந்து பத்தியம் (விரதம்) கடைபிடிக்க வேண்டும்.

# கடவுளுக்கு, நம் உதவி தேவைப்படுமா?



பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை யுள்ளவர்கள், காலை அல்லது மாலை நேரத்தில் கோவிலுக்குச் செல்லும் பழக்கமுடையவர்களாக இருக்கின்றார்கள். அங்கு தங்கள் விருப்பம் நிறைவேற வேண்டுதல் செய்கிறார்கள். கடவுள் அன்புள்ளவர், இரக்கமுள்ளவர், எதுவேண்டு மானாலும் அவரால் செய்ய முடியும். ஆதலால் ஒவ்வொருவருடைய விருப்பத்தையும் நிறை வேற்றுவார் என்ற நம்பிக்கை உலகளாவியதாக இருந்து கொண்டிருக்கின்றது. மேலும் கோவிலி ல் அர்ச்சனை செய்வதற்கு பிரத்யேக ஏற்பாடுகள் செய்தாலும், ஏதோ தனது விருப்பம் நிறைவேற வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு தான் செய்வதே வழக்கமாகவும் இருக்கிறது.

கடவுள் கருணைக்கடல், அவர் மனிதர் களுடைய கவலையை நீக்கி பலவீனத்தை நிவர்த்தி செய்து, மனோ விருப்பங்களை நிறைவேற்றுபவராக இருக்கின்றார். இது அவருடைய கடமையாகவும் இருக்கிறது என்ற நம்பிக்கையும் உண்டு. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் கூட சில வேளைகளில் வேறு வழி இல்லை என்ற நிலை ஏற்படும்போது அவரை அறியாமலேயே கூட அவரது மனம் கடவுளை நாடாமல் இருக்காது.

கடவுளின் சிறப்பு என்னவென்றால், வேறு யாராலும் செய்ய முடியாத ஒரு காரியத்தை அவரால் செய்ய முடியும். அந்த அளவுக்கு அவர் ஞானமும், சர்வ சக்தியும் உடையவராக இருக்கின்றார். அவரைப் போன்ற ஒரு மிக உயர்ந்த நிலை இந்த பிரபஞ்சத்தில் வேறு யாருக்குமில்லை என்ற நம்பிக்கை எல்லோர் மனதிலும் மிக ஆழமாகப் பதிந்துள்ளது. மேலும் எல்லாம் அவன் செயல் அவரன்றி அணுவும் அசையாது என்ற முழு நம்பிக்கையும் இருப்பதைப் பார்க்க முடிகிறது.

இத்தகைய முழு நம்பிக்கை இருக்கின்ற அதே சமயம் எத்தனையோ விதமான தீய செயல்கள், வன்முறைகள், விபத்துக்கள் நடப் பதைப் பார்த்து, இதுவும் கூட அவர் செயலா? மனதில் இது போன்ற சிறு குழப்பங்கள் ஏற்படுவதுண்டு. இதுவும் கடவுளின் செயல் தான் என்பது உண்மை என்றால் அவரை கருணைக் கடல், எல்லாம் வல்லவர் என்று மகிமை செய்கிறோமே, இது பொருந்தாத ஒன்றாக ஆகிவிடவில்லையா? ஆனால் இம்மாதிரியான பழியை கடவுள் மீது சுமத்த யாரும் தயாரா யில்லை என்பதே உண்மை. ஏனெனில் நடை முறை வாழ்க்கையில் எப்போது யாருக்கு என்ன நடந்தாலும், கடவுளுடைய உதவியையே நாடு கிறோம் என்பது நிதர்ஷணம்.

கடவுள் ஆத்மாக்களையோ, தத்துவங் களையோ படைப்பவர் அல்ல. எப்போது இந்த உலகம் நரகமாகி விடுகிறதோ, அப்போது இதனை சத்திய யுகமாக அதாவது சொர்க்கமாக புதுப்பிக்கின்றார் என்பதாக இருக்கின்றது. ஒவ்வொரு கல்பத்திலும் தன் குழந்தைகள் (ஜீவாத்மாக்கள்) தூய்மையும், சாந்தியும், மகிழ்ச்சியுடன் 21 ஜென்மங்களுக்கு நிறைவான சொர்க்கத்தைப் படைக்கின்றார். இதற்காக, கலி யுக இறுதியான சங்கம யுகத்தில் ஆத்ம ஞானமும், சக்தியும் அளிக்கின்றார். ஆத்மா வைப் பற்றியும், பரமாத்மாவைப் பற்றியும் கர்மத் தின் விதியையும் பற்றிய உண்மையான ஞானம் கடவுளைத் தவிர

வேறு யாரிடமும் இல்லை.

ஜோதி சொரூபமாக விளங்கும் பரமபிதாவான பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மாவின் சரீர ஆதாரத்தின் மூலம் அருளுகின்ற ஞானத் தின் அடிப்படையில், இவ்வுலக நாடக அரங்கில் ஜீவாத்மாக்கள் தங்கள், தங்கள் விருப்பப்படி என்ன செய்கின்றார்களோ, அந்தந்த கர்மங்களின் பலா பலன்களை அனுபவிக்கின்றார்கள் என்பதாக உள்ளது. இதில் கடவுளின் உதவி என்பது, ஜீவாத்மாக்களுக்கு, சுகமாக வாழும் கலையைக் கற்பிப்பது தான் அவரது கடமையாக இருக்கின்றது.

எனினும் உரிய தருணத்தில் ஜீவாத்மாக் களுக்கு, பரமாத்மா உதவியும் செய்கின்றார். ஒவ்வொரு ஆத்மாவும் தங்கள் சுயமாற்றத்தின் மூலம், உலகமாற்றமும் உண்டாவதற்கு அவரிடமிருந்து சக்தியைப் பெறும் சத்திய வழியைக் காட்டுகின்றார். இம்மாதிரியான உதவி செய்கின்றார். இதற்கான சுப வேளை, கலியுக இறுதியில் புருஷோத்தம சங்கமயுகம் என அறிகின்றோம். இந்த யுகத்தில் தான் பதீதமான ஜீவாத்மாக்கள் சுய மாற்றம் அடைந்து பாவனமாகி (புனிதமாதல் ) தங்கள் பரந்தாமம் என அழைக்கப்படுகின்ற தங்கள் வீட்டிற்கு ஓய்வுக்காகத் திரும்பும் நேரம் ஆகும்.

இம்மாதிரியான சமயத்தில் கடவுள் ஒரு புதிய உலகை பிரம்மா மூலமாகப் படைக்கின்றார் என இந்து மத புராணங்கள் கூறுகின்றன. மேலும் **பிரம்மாவுக்கு ஆயிரம் கைகள் உண்டென்றும் குறிப்புகள் உண்டு. இது புதிய உலகப் படைப்பில் கடவுளுக்கு மனிதர்கள் உதவி செய்கின்றார்கள் என்பதைக் குறிப்பதாக இருக்கின்றது.** சங்கமயுக சமயத்தில், கடவுள் புதிய உலகைப் படைக்கும் போது ஞானத்தின் **ஆதாரத்தில் தீய குணங்களாகிய விகார குணங்களை நீக்கி தூய்மை அடைந்து சுதந்திரம் பெற்ற ஆத்மாக் கள் சொர்க்கம் படைக்கும் காரியத்தில் கடவுளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதாக உள்ளது.**


**இப்படி எப்போது நிகழும் என்றால், எப்போது கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவர் வழிப்படி சுயமாற்றம் செய்து, புனிதமாகி புதிய உலகப்படைப்பில் கடவுளுக்குக் கருவி களாக ஆகின்றார்களோ அப்போது புது உலகம் எனப்படும் சொர்க்கம் ஸ்தாபனை ஆகும்.** இதுபோன்று, தூய்மையடைந்த ஆத்மாக்கள், யாரெல்லாம் கடவுளுக்கு உதவி செய்யத் தயாரா யிருக்கின்றார்களோ, அவர்கள் மாஸ்டர் படைப்பவர் என அழைக்கப்படுகின்றனர்.

கடவுள் சர்வ சக்திவானாக இருப்பினும், கர்வமற்றவராக இருக்கின்றார். **அவருடைய புதிய உலகப்படைப்பின் போது, மற்றவர்களும் உதவ வேண்டும் என அவர் விரும்புவது நமது பாக்கியத்தை பன்மடங்கு அதிகரிக்க உதவுவ தாகும்.** மேலும் வரும் காலத்தில் அநேகப் பிறவிகளில் முக்தியும், ஜீவன் முக்தியும் அளிக்க வல்லதாகவும் இருக்கிறது. **இவ்வாறு நமது உதவியை நாடுவதன் மூலம் நமக்கு உதவுகின்றார்.** இதை விட ஒரு லாபகரமான ஒப்பந்தம் வேறு எதுவுமே இருக்க முடியாது. நீங்களும் கடவுளுக்கு உதவத் தயாராக இருக்கிறீர்களா?

## மனித குலத்திற்கு, இறைவனின் அன்புப் பரிசு

பற்பல பிறவிகளாக நாம் பக்தி செய்து பகவானுக்கு பூமாலைகள் சூட்டி மகிழ்ந்தோம். இதற்கு கைமாறாக பகவான் இப்பொழுது நம்மை தெய்வீக குணங்களால் அலங்கரிக்கின்றார். விலை மதிக்க முடியாத ஞான ரத்தினங் களாலான மாலையை நமக்கு அணிவிக்கின்றார். இறைவனின் இந்த அன்புப் பரிசை நாம் அணிந்து கொள்ள வேண்டும். இது நமது சௌபாக்கியத்தின் அடையாளமாகும். இதன் மூலம் நாம் மேலும் பன்மடங்கு பாக்கியசாலி களாக முடியும்.

# சிந்தனைக்கு ....



ஸ்ரீமத் பகவத் கீதையின் சத்திய சாராம்சம் பற்றி சிந்தனைக்குரிய கருத்துக்கள் சிலவற்றை கட்டுரையில் பார்த்தோம். ஸ்ரீமத் பகவத் கீதை பரமாத்மா (பகவான்) ஜீவாத்மாக்களுக்கு உபதேசம் செய்த ஆத்ம ஞானம் ஆகும். இது கீதை என வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்த கீதை ஞானம் அருளிய பகவான் என்று யாரைக் குறிப்பிடுகிறோம்? பகவான் என அழைக்கப் படுபவர் யார்? பிறப்பு, இறப்புக்கு அப்பாற்பட்டவர் யாரோ, தனக்கென சரீரமற்றவர் யாரோ அவர் தான் பகவான். ஆதலால் பகவான் என்பவர் நிராகார் (சரீரமற்றவர்) பரமாத்மா. சரீரமற்றவரா தலால் பரமாத்மாவின் உருவம் அதி சூட்சுமமான புள்ளியாக ஜொலிக்கும் ஜோதி சொரூபம் என்பதாகும். ஆகையால் கீதை உபதேசம் செய்தது எப்படி? இந்தக் கேள்விக்கான விடை. அவதாரம் செய்கின்றார் என்பதாக உள்ளது. பரமாத்மா பிறவிக்கு அப்பாற்பட்டவராக இருப்பதால், அவதாரம் அல்லது பிரத்யக்ஷம் என்பது பரகாய பிரவேசம் என அறிகிறோம். அதாவது பிரவேசம் செய்த அந்த சரீரத்தின் கர்மேந்திரியங்களைப் பயன்படுத்தி உபதேசம் செய்கின்றார் என்பது மேலும் பரமாத்மா ஜோதி சொரூபம் என்பதன் காரணமாகவே அவர் ஆகர்ஷண மூர்த்தி என வர்ணிக்கப்பட்டிருக் கின்றார் என்றாகிறது. மேலும் மக்கள் எளிதில் புரிந்து கொள்வதற்காகவும், ஸ்தூலமாகவும், யுத்தகாண்டமாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஜோதி சொரூபமாக விளங்கும் பகவான், ஞானம் எனும் மூன்றாம் கண் மூலமாகவே அறிந்து கொள்ளக் கூடியவராக இருக்கின்றார். என்ன காரணத்தாலோ ஸ்தூல வடிவம் பெற்று விட்டது. இதன் பாதிப்பு ஸ்ரீமத் பகவத் கீதை ஒரு சாராருக்கு மட்டுமே சொந்தமான சாஸ்திரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. மேலும், எல்லோராலும் அழைக்கப்படுபவராக இருக்கின்ற பரமாத்மா ஒரே ஒருவர்தான். அதர்மம் உச்சகட்டத்தை எட்டி விடும்போது, அதர்மத்தை அழித்து, தர்மத்தை ஸ்தாபனை செய்யும் தனது கடமையை ஆற்றுவதற்காக அவதாரம் செய்வதும் கல்பத்தில் ஒரே ஒரு முறைதான். இந்த ஒரே ஒரு முறை என்பதும் அதர்மம் நிறைந்த கல்பத்தின் கடைசி யுகமான கலியுகத்தின் இறுதியான சமயத்தில் தான் என்பதும் தெளிவாக இருக்கிறது. ஆதலால் பரமாத்மாவின் அவதாரத்திற்கு அவசியமான நேரம் கலியுக இறுதி என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

ஆதலால் கீதை உபதேசம் செய்ததும் கலி யுகத்தின் இறுதியான நேரத்தில் தான் என்பதும் உறுதியாகிறது. அதாவது இத்தருணத்தில் தான் நிராகார் பரமாத்மா ( பகவான் ) பூலோகத்தில், வேடதாரிகளாக இருக்கும் ஜீவாத்மாக்களுக்கு அவசியமான ஞான உபதேசம் செய்யும் தனது கடமையை நிறைவேற்றுகிறார். இதன் மூலம் ஸ்ரீமத் பகவத் கீதைதான் முதலாவதும், முதன்மையானதும் எல்லோருக்குமானதுமான சாஸ்திரம் என்பது உறுதி. ஆதலாலேயே ஸ்ரீமத் பகவத் கீதை சாஸ்திரங்களின் சிரோண்மணி என்ற மகிமைக்குரியதாக இருக்கின்றது. ஸ்ரீமத் பகவத் கீதை நூல் வடிவம் பெற்றதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கக் கூடும். என்றாலும், பகவான் உபதேசம் செய்த ஆத்ம ஞானமே கிருதயுகம் என நாம் அறிகின்ற சத்யுகம்

அல்லது சொர்க்கம் எனும் பொற்காலம் மலருவதற்கு ஆதாரமாக இருந்திருக்கிறது என்பதில் எந்த ஒரு ஐயமுமில்லை இதன் பிறகு திரேதாயுகம் அடுத்து துவாபரயுகம் என்று கணக்கிட்டால் 2500 ஆண்டுகாலம் கழிந்த பின்னரே துவாபரயுகத்தில் இதர மதங்களான இஸ்லாம், பௌத்தம் கிறித்துவம் ஆகிய மதங்கள் தோன்றியிருக்கின்றன என்பது வரலாறு.

இவ்வாறு அறிந்தும் அறியாமலும், புரிந்தும் புரியாமலும் இருக்கின்ற இத்தகைய சூழ்நிலை காரணமாகவே, மனித வாழ்க்கையின் நடைமுறைகள் மாறுபட்ட நம்பிக்கையுடையதாக ஆகியிருக்கக் கூடும். காலத்திற்கும் உலக நாடகத்திற்கும் இதில் முக்கிய பங்கு உண்டு என்று எணணவும் இடமளிக்கிறது. எனினும் நாடகம் இப்படித்தான் நடந்து முடிய வேண்டும் என்று நிச்சயிக்கப்பட்டிருந்தால், இதில் நாம் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

# அதிகாலை நல்லெண்ணத்தின் முக்கியத்துவம்



அதிகாலையில் கண்விழித்தவுடனேயே மனதில் எண்ணங்களின் ஓட்டம் ஆரம்பமாகிறது. அதாவது அதிகாலையில் எழுந்த உடனேயே நல்ல நல்ல எண்ணங்களை தீர்மானியுங்கள். அல்லது உண்மையான அற வழி நூல்களை படிக்கவும். இவ்வாறு அதிகாலை வேளையில் சிறந்த மேன்மையான எண்ணங்களை மேற்கொள்வதால் முழு நாளும் வீணானவைகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பீர்கள்.

இவற்றின் கூடவே சாட்சி நிலை, சுய தரிசனம், ஆத்மீகப் பார்வை, நல்லெண்ணம், விருப்பம் மற்றும் கபட மற்ற மனம் இப்படியான நடைமுறை நம் மனதை நிலையானதாக ஆக்குகிறது. நாம் இந்த நிலைப் பாட்டை உருவாக்க வேண்டும். இதனால் சதா காலமும் வீணானவற்றிலிருந்து விடுதலை மன ஒருமைப்பாட்டில் இருக்கலாம்.

இந்த உயர்வான சங்கல்ப சக்தியை மனதில் நிலை நிறுத்த வேண்டும் என்ற அசையாத உறுதியை தனக்குள் கொண்டு வரவேண்டும். இந்த சக்தி தான் நமது பாக்கியத்தை தீர்மானிக்கிறது. யாருடைய மனம் ஸ்திரமாக இருக்கிறதோ அவர் தன் வாழ்க்கையில் முழுமையான சுகத்தை அனுபவம் செய்கிறார், அவரைப் பொருத்தவரை வாழ்க்கை ஒரு விளையாட்டாக (கேளிக்கையாக) ஆகின்றது. அவருடைய நல்லெண்ணங்கள் அனைவருக்கும் சுகமளிப்பதாக இருக்கும், அவருடைய வாழ்க்கை விகாரமற்றதாகவும், மன அழுத்தத்திலிருந்து (டென்ஷன்) விடுதலை ஆகிவிடுகிறது மற்றும் பார்வை ஒளி மிகுந்து (ஜொலிப்பு) காணப்படும்.

வாருங்கள்! நாமும் சங்கல்ப சக்தியை ஸ்திரப்படுத்தி இந்த பூமியில் சக்திசாலியான அதிர்வுகளை பரவச் செய்வோம். இதன் மூலம் மனிதர்களை சவாலான (அழிவை) விநாசத்தை துணிச்சலுடன் எதிர் கொள்ளச் செய்வோமாக!



# பாவத்தின் விளைவு

## தாதி குல்ஜார்ஜி

**தமிழாக்கம் பி.கு. துர்காபிரசாத்**

பாவங்களின் விளைவானது நமது சிரேஷ்டமான பாக்கியங்களில் இழப்பு அடையச் செய்கிறது. பாவம் என்பது சங்கல்பங்களின் மூலமாகவும் விளையக்கூடும் சங்கல்பங்களில் தோன்றக்கூடிய பாவம் நேரிடையாக, அதன் பலனை அடையச் செய்யும். சங்கல்பத்தில், சுயத்தினுடைய குறையானது, அதாவது அந்த குறை எந்த விகாரமாகவும் இருக்கலாம், அவை பாவத்தின் கணக்கில் சேர்ந்து விடும். மேலும் மற்ற ஆத்மாக்களிடத்தில் சங்கல்ப நிலையிலும், விகாரம் ஆட்கொண்ட மனப்பாங்கு உள்ளவராக இருந்தால், அதுவும் பெரிய பாவமேயாகும்.

மற்ற வேறு எந்த ஆத்மாவிடத்தில் வீணான பேச்சும், பாவத்தின் கணக்கில் சேர்ந்து விடுகிறது. அவ்வாறே கர்மத்திலும், உறவு மற்றும் தொடர்பிலும் சுப பாவனைகளுக்கு மாறாக வேறு எந்தவிதமான பாவனை கொண்டிருந்தாலும், அவைகளும் பாவத்தின் கணக்கில் சேர்ந்து விடும். ஏனென்றால் அவைகளும் துக்கத்தை கொடுக்க வல்லதே யாகும். சுப பாவனைகள் புண்ணியத்தின் கணக்கை சேமிக்கிறது. வேண்டாத பாவனைகள், பொறாமை, வெறுப்பு, துவேஷம் கொண்ட பாவனைகள் பாவத்தின் கணக்கை அதிகரித்து விடும். ஆதலால், பாபாவின் குழந்தைகள் அவர் பொக்கிஷத்துக்கு அதிகாரிகளாக வேண்டும் என்பதாகும். இவ்வாறான நிச்சயமானது இந்த ஊக்க உற்சாகமானது, மிகவும் நல்லதாகும். ஆனால், உற்சாகம், பொறாமையுடன் கலந்து விடக்கூடாது. பாபாவின் குழந்தைகளான பிறகு அடையும் பிராப்திகள் அளவற்றவையாகும். ஆனால் புண்ணிய ஆத்மாக்களாவதுடன், பாவத்தின் கணக்குகளும், நூறு மடங்கு அதிகமாக ஏற்படக்கூடியதாகும். ஆதலால் இம்மியளவும் கவனமற்று இருத்தல் ஆகாது. பாபாவினுடையவராவது அவருடைய ஆஸ்திகளை அறிவது அதாவது பிரம்மா குமாரர்கள் என சொல்லப்படுவதாகும். ஆதலால், இப்பொழுது இருக்க வேண்டியது, புண்ணியத் திலும் புண்ணிய நிலையாகும். நம்மில் பாவம் முற்றிலும் முடிந்து விட்டது. சம்பூரணமான நிலையை நெருங்கி விட்டோம். இவ்வாறான சிந்தனைகளில், நீங்கள் வந்து விட வேண்டாம். பிரம்மா குமாரர்களின் நியமங்கள் நினைவில் கொள்ள, மரியாதைகளை எப்பொழுதும் எதிரே வைத்துக் கொள்ளவும், புண்ணியம் பாவம் இரண்டின் ஆழ்ந்த ஞானத்தையும் புத்தியில் வைத்துக் கொள்ளுங்கள், உங்களுக்குள் சோதனை செய்யுங்கள், புண்ணிய ஆத்மா என சொல்லிக் கொண்டு மனதின் மூலமாகவோ, வார்த்தைகள் வழியாகவோ, கர்மங்களின் வாயிலாகவோ எந்த பாவமும் செய்ய வில்லையே? இப்பொழுது என்ன கணக்குகள் சேமித்துக் கொண்டிருக்கிறோம்? எந்த விதமான செய்கையாலும் பாபாவின் பெயருக்கு அல்லது ஞானத்துக்கு இழுக்கு, களங்கம் ஏற்படுத்த வில்லையல்லவா? சோதனை செய்துக் கொள்ளவும் பாபாவிடம் எல்லோருடைய கணக்கும் தெளிவாக இருக்கிறது. ஆனால் நீங்களும் தெளிவு படுத்திக் கொள்ளவும். உங்களுக்குள், நீங்களே சரி செய்து கொள்ளாதீர் கள். அதாவது உங்களை ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். இவை என்னமோ நடந்து

கொண்டி ருக்கும், எல்லோரிடத்திலும் இருந்துக் கொண்டு தான் இருக்கிறது. என்றெல்லாம் சரி செய்துக் கொள்ளாதீர்கள். எல்லோரிடத்திலும் இருக்கலாம், ஆனால் நான் எப்படி இருக்கிறேன்? பத்திரமாக இருக்கிறேனா? இவ்வாறான நல்ல விருப்பங்கள் கொள்ளவும். அப்பொழுது விஸ்வ சேவாதாரி களாக முடியும். எல்லோரும் சேர்ந்த நிலையில் ஒரு வழி ஒரு ரசனையின் ஸ்திதியை அனுபவம் செய்வீர்கள். இனியும் பாவத்தின் கணக்கு சேர்த்துக் கொண்டிருந்தால் எப்பொழுது முடிவை காண்பீர்கள்? மற்ற வெளி ஆத்மாக் களையும் புண்ணிய ஆத்மாக்களாக ஆக்க எப்பொழுது நிமித்தமானவராக ஆவீர்கள்? ஆதலால் மாறுபட்ட தளர்ந்த நிலையிலும், பாவத்தின் கணக்கு சேர்ப்பதை முடிவு செய்து விடுங்கள். எப்பொழுதும் நிலையான புண்ணிய ஆத்மாவாகுக! எனும் வரதானம் பெற வேண்டும். அஞ்ஞானிகளின் கூற்று தவறானது தீயதைக் கேட்காதீர்கள், பார்க்காதீர்கள், எண்ணாதீர்கள் என்பதாகும். இப்பொழுது பாபா சொல்கிறார் வீணானவை கேட்காதீர்கள், சொல்லாதீர்கள், மற்றும் சிந்திக்கவும் வேண்டாம், எப்பொழுதும் சுபபாவனையுடன் சிந்தியுங்கள், நல்லதையே பேசுங்கள் வீணானவற்றையும் சுப பாவனையுடன் கேட்கவும் விஞ்ஞானத்தின் சாதனைகள் கெட்டு போனவற்றையும் மாற்றி நல்லதாக ஆக்கிவிடுகின்றது. உருவத்தையே மாற்றி விடுகின்றது. அதைப் போல எப்பொழுதும் சுப சிந்தனைகளிலேயே இருக்கும் நீங்கள் எவ்வாறான ஆத்மாக்களின் வார்த்தைகளையும், பாவனைகளையும் மாற்றிவிட முடியாதா? எப்பொழுதும் நல்ல பாவனை, சிரேஷ்ட பாவனை வைத்திருந்தால் நிலையான புண்ணிய ஆத்மா வாக ஆகி விடுவீர்கள். உங்களை அவ்வாறு மாற்றிக் கொள்ளுங்கள். மற்றவரின் மாற்றம் பற்றி எண்ணாதீர்கள். சுயத்தை மாற்றம் செய்து கொள்வது, மற்றவரையும் மாற்றம் செய்யக் கூடியதாகும். இதில் நான் முதன்மையானவன் இவ்வாறு நினையுங்கள். இந்த இறந்து வாழும் வாழ்விலேயே மகிழ்ச்சி இருக்கிறது! பயம் வேண்டாம் ! மகிழ்ச்சியோடு இறக்கவும் - இந்த இறப்பானது சிறப்பாக வாழ்வதாகும். இதுவே உண்மையான உயிர் தானம் தருவதாகும்.

**கேள்வி: ஆன்மீகத்தில் உயர்நிலை அடைவதற்கு சரணடைதல் முக்கிய மானது என்கின்றனர். இதன் பொருள் என்ன?**

**பதில்:** சரணடைதல் (அர்ப்பணித்தல்) என்பது தன்னை ஒருவர் உயர் மரியாதைகளுக்குட் படுத்திக் கொள்வதாகும். கடவுள் தனக்கு நல்வழி காட்டுவார் என்ற உறுதியான நம்பிக்கையுடன், வாழ்க்கையில் ஒவ்வொன்றையும் அதாவது எண்ணம், சொல், செயல், நேரம், பொருள், சக்தி அனைத்தையும் பயன் தரும் வகையில் அர்ப்பணித்தல் ஆகும். இதில் முக்கியமானது புத்தியை அர்ப்பணித்தல். அதாவது புத்தி என்னும் லகானை (கயிறு) அவர் கையில் கொடுத்து விடுவது என்பதாகும். மனிதனிடம் சரணடைவது இழிவானது. ஆனால் கடவுளிடம் சரணடைவது இனிமையானது. கடவுளிடம் சரணடைதல் என்பது, பொய்யான, உத்தரவாதமில்லாத பாதுகாப்பு மற்றும் ஆதாரத்தை விலக்கி கடவுள் ஒருவரையே ஆதாரமாக வைத்துக் கொள்வது. இது கடவுளுடைய அன்பையும், அருளையும் ஏற்றுக் கொள்ள சித்தமாகி விடுவதாகும். அவரிடம் நிச்சயம் மற்றும் நம்பிக்கையோடு தன்னை பிணைத்துக் கொள்வது. மேலும் சரணடைதல் என்பது தனக்கிருக்கும் குழப்பங்கள், கேள்விகள் போன்ற சூட்சுமசங்கிலிகள் அறுபட்டு சுதந்திரமடைதல் என்பதாகும்.



# மலேசியா சேவை செய்தி

மலேசியா வாழ் தமிழ் மக்கள் சேவையின் நிமித்தம், அவர்களது விசேஷ அழைப்பின் பேரில் சகோதரி பிரம்மா குமாரி ஜெயா அவர்கள் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் அங்கு சென்றிருந்தார்கள். சகோதரி ஜெயா அவர்கள், அங்குள்ள ஆஸ்ட்ரோ டிவி ஸ்டேஷன் மூலமாக தமிழ் மக்களிடையே அறிமுகமா யிருந்தார். அவர்களது சேவை, பிரம்மா குமாரிகள் ஆன்மீக சேவை பற்றிய விழிப்புணர்வு எனும் தலைப்பில் ஆரம்பமாயிற்று.

மறுநாள் குறிப்பாக மலேசியாவின் முக்கிய நகரமாகிய கிளாங் சிட்டியில் ஆரம்பமாகி இங்கு மங்குமாக 16 இடங்களில் சேவை நடை பெற்றது கர்மம் அல்லது விதி எனும் தலைப்பில் விசேஷ நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொன்றிலும் சுமார் 500 பேர் வரை பங்கு பெற்று பயனடைந்தனர். அடுத்த நாள் ஆசியா ரிட்ரீட் சென்டரில், மகிழ்ச்சிக்கு மனோ வலி மை அவசியம் என்ற தலைப்பில் சொற்பொழிவு நடந்தது. இத்தகைய நிகழ்ச்சியில் மிக அதிகமான மக்கள் பங்கு பெற்றிருந்தனர். மிக அதிகமாக 1250 பேர் பங்கு பெற்றிருந்தனர். ஈபோ என்ற நகரில் தான். மலேசியா சேவை நிகழ்ச்சிகளில் மொத்தம் 6000 பங்கு பெற்று பயனடைந்திருக்கிறார்கள் என தெரிகிறது.

முக்கியமாக மலேசியாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரேடியோ மலேசியா (மின்னல் எப் எம்) கேள்வி பதில் நிகழ்ச்சியாகும். இது மாதிரியான ஒரு சேவை இப்போதுதான் நடந்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியினை அனுப்பியிருக்கின்றார்கள்.

**கேள்வி: இராஜயோகம் பயில விரும்புகிறேன். இதற்காக எனது மதத்திலிருந்து மாற வேண்டுமா?**

**பதில்:** யாரையும் மத மாற்றம் செய்வது இப்பயிற்சியின் நோக்கம் அல்ல. தனது ஆதி நிலையை அறிந்து அதற்கேற்றவாறு தன்னை சரி செய்து கொள்வது எப்படி என்னும் வழியைக் காட்டுவது தான் இராஜயோகம். இது ஒரு மதம் அல்ல. இது மனிதனுக்கு அவசியமான, பொருத்தமான ஒரு வாழ்க்கைக் கலை. யாராயினும், தனது மதத்தை விட்டுவிடாமல் இராஜயோக வழி முறைப்பயிற்சிகளையும் செம்மையாகச் செய்து அனுபவம் செய்ய முடிந்தால், உண்மையில் மெச்சத்தக்கதாகவே இருக்கும். இது, தான், கிரஹித்துக் கொள்ளும் தன்மையின் அடிப்படையில் ஒருவர் அடையும் திருப்தியைப் பொருத்ததாகும்.

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-40 அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை-5
R.No.49463/87

# அகில உலக யோகா தின நிகழ்ச்சிகள்



இலங்கை(கண்டி): அகில உலக யோகா நிகழ்ச்சியில் இலங்கை குடியரசு தலைவர் மைத்ரிபாலா சீரிசேனா அவர்களுக்கு இறைநினைவு பரிசு அளிப்பவர் Dr. பி.கு. கலா



**கனடா:** சிவன் கோவிலில் ஏற்பாடு செய்த ஆன்மீக நிகழ்ச்சிக்கு பிறகு பி.கு. சகோதர சகோதரிகளுடன் சாஸ்திரி அவர்கள்.



**ஈரோடு:** வணிக பெருமக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி துவக்கவிழாவில் குத்துவிளக்கு ஏற்றுபவர்கள் நகர முக்கிய பிரமுகர்களுடன் பி.கு. உமா, திருவண்ணாமலை.



ஈரோடு: பி.கு. உமா அவர்கள் மன இறுக்கத்திலிருந்து விடுதலை என்ற தலைப்பில் உரை நிகழ்த்துகின்றார்.



கடலூர்: அகில உலக யோகா நிகழ்ச்சியில் யோக அனுபவம் செய்விக்கின்றனர் பி.கு. சகோதர சகோதரிகள்.



**திருவண்ணாமலை:** அகில உலக யோகா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதி.



**ஸ்ரீபெரும்புதூர்:** Rajiv Gandhi National Institute of Youth development ( RGNIYD) அகில உலக யோகா நிகழ்ச்சியில் உரையாற்றுபவர் பி.கு. நீலிமா.



**திருப்பூர்:** அகில உலக யோகா தினத்தை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி துவக்கவிழாவில் உரையாற்றுபவர் R. திருநாவுக்கரசு, IPS மற்றும் பி.கு. ரேணுகா

# அகில உலக யோகா தின நிகழ்ச்சிகள்



**டில்லி (செங்கோட்டை):** சுமார் 40000 பேர் கலந்து கொண்ட அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் உரையாற்றுபவர் இராஜயோகினி பி.கு. ஜானகிஜி பிரம்மா குமாரிகள் இயக்க தலைவி மற்றும் இராஜயோகினி பி.கு. இருதயமோகினிஜி




**சென்னை:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் யோக அனுபவம் செய்ய வைப்பவர்கள் பி.கு. இரஞ்சனி, பி.கு. சரோஜா, பி.கு. பீனா, பி.கு. ரங்கநாயகி



**சென்னை:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சகோதர சகோதரிகள்



**திருவனந்தபுரம்:** அகில உலக யோகா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சகோதர சகோதரிகள்



**பாலக்காடு:** அகில உலக யோகா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சகோதர சகோதரிகள்



**மதுரை:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் குத்துவிளக்கு ஏற்றுபவர்கள்: Adv. திரு, இராமசாமி, Secretary, Madurai Bar Association, திரு. பொன்ராஜ், Scientist, திரு. சினிவாசன், Director, Alno kitchen World, பி.கு. மீனாட்சி, திரு. தத்தாராயன், Director, Lakshmi Vilas Bank, திரு. வாசுதேவன், Director, Hotel Fortune Pandian, திரு. கருணாநிதி, Exe. Prog. Director, Doordharsan, பி.கு. உமா



**மதுரை:** அகில உலக யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நகர பிரமுகர்கள்.

R.No.:49463/87